# மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

2 | 15 - 9 - 53 | இதழ் 1


## சி. ஆர். சாலை

(ஆச்சாரியார் "தர்ம" ஆட்சியில், சிறைக்குள் தள்ளப்படுகிறவர்கள் எண்ணிக்கையும், தூக்குப்போட்டுக்கொள்ளுகிறவர்கள் எண்ணிக்கையுந்தான் உயர்ந்திருக்கின்றன. சிறைச்சாலை, சி. ஆர். சாலையாக விளங்குகிறது.)


நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா



Best copy available.

# ...காந்தியார் சாந்தியடைய

(இந்தியாவின் நிலை குறித்து, ஆலோசனை செய்ய வட்டமேஜை ...நாடு, 1931-ல் லண்டனில் கூட்டப்பட்டது. அதில் மகாத்மா காந்தி ...வர்கள் காங்கிரசின் சார்பாக—இப்பொழுதுள்ள காங்கிரஸ் அல்ல, ...ப்பொழுது அடக்குமுறைகளை எதிர்த்து விடுதலைக்காகப் போராடிக் ...ாண்டிருந்த காங்கிரசின் சார்பாகசென்றிருந்தார். அந்த வட்டமேஜை ...நாட்டில், காந்தியார் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து, கீழே தரப்படும் ...நதிகள் எடுக்கப்பட்டுள்ளன.

உத்தமர் காந்தியார் அன்று வெள்ளையர்களுக்கு கூறிய உரைகளை, ...ன்று காங்கிரஸ் அதிபர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.)

...இங்கு எனக்குமுன் ஒவ்வொருவரும் ...சம்பொழுதும், மிகக் கவனத்துடனும், ...ப்புடனும், கேட்டுக்கொண்டிருந்தேன். ...பேசிய பேச்சையும் கேட்க நான் தவறி ...வில்லை. அந்தப் பேச்சாளர்களில் பலர், ...தியாவில் சட்டமறுப்பு, கலகம், பலாத் ...ம் முதலியவை தூண்டப்படுமானால் எத்த ...ப பயங்கர நிலைக்கு அது கொண்டுபோய் ...மென்பதைப் பற்றிப் பலமாகப் பேசினார் ... சரித்திரப் புத்தகங்களை அதிகம் படித்த ... நான் பெருமையடித்துக்கொள்ள முடி ...து. ஆனாலும், பள்ளிக்கூட நாட்களில், ...டைக்காகவாவது சரித்திரப் புத்தகத்தை ...ர படிக்கவேண்டி நேரிட்டது. விடுதலை ...மைக்காகப் போராடியவர்களின் இரத்தத் ... மெழுகப்பட்டு, சரித்திர ஏடுகள் சிவந்து ...ங்குகின்றன என்பதை நான் அறிந்திருக் ...ேன். கொடுமைகளாலும் கஷ்ட நஷ்டங் ...களும் தாக்கப்படும் நீண்ட பாதையின் ...யே செல்லாமல், வேறு வழிகளால் விடு ... உரிமையை அடைந்த நாடு எதுவுமிருப்ப ... எனக்கு ஞாபகமில்லை.

*  *  *

...விடுதலை பெறவேண்டுமென்பதற்காக ...ள் போராடியிருக்கிறார்கள், போராட்டத் ... உயிர் நீத்திருக்கிறார்கள்.....புதிய முறை ...ா சட்டமறுப்பு இயக்கத்தை நாங்கள் ...டங்கினோல், இந்த முறையை எந்த அர ...கமும் சகித்துக்கொண்டிருக்காது என்று ...க்கு அறிவிக்கப்படுகிறது. அரசாங்கத் ... சகித்துக்கொள்ள முடியாமலிருக்கலாம், ...மையில் எதிர்ப்புக் கிளர்ச்சிகளை உலகத் ... எந்த அரசாங்கமும் சகித்துக்கொண் ...க்கவில்லை. அரசாங்கம் சகித்துக்கொள்

ளாமலிருந்தாலும், கடைசியாக அந்தச் சக்திகளுக்கு அரசாங்கம் பணியத்தான் வேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் பணிந்திருக்கிறது, டச்சு அரசாங்கம் எட்டு வருஷங்களாக உருட்டி மிரட்டியபின் பணிந்திருக்கிறது."

*  *  *

"உங்களுடைய (இங்கிலாந்தைச் சேர்ந்த) வைசிராய் தன்னால் முடிந்தவரை, அடக்குமுறைகளையும், சட்டங்களையும் துணைகொண்டு பார்த்துவிட்டார், அவற்றை எதிர்த்துக் கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ள இந்தியாவில் ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உள்ளனர் என்பது இதற்குள் அவருக்குத் தெரிந்திருக்கும். அடக்குமுறைச் சட்டங்கள் எவ்வளவுதான் வீசப்பட்டாலும், தடியடிகள் எவ்வளவுதான் தரப்பட்டாலும், விடுதலை காணத் துடிக்கும் மக்களின் இதயக் குமுறல்களை அடக்க, எழுச்சி வெள்ளத்தைத் தடை செய்ய யாராலும் முடியாது."

*  *  *

(வெறித்தன்மையான போராட்ட முறையில் எனக்கு நம்பிக்கையில்லை.) போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட நாட்டுக்கு கொலையாளியின் கத்தி தேவையில்லை, விஷம் தோய்ந்த கிண்ணம் தேவையில்லை, வாள் தேவையில்லை, துப்பாக்கியோ, ஈட்டியோ தேவையில்லை. அந்த நாடு தன்னம்பிக்கையும் உறுதியும் பெறவேண்டும், "முடியாது" என்று எதிர்த்துக் கூறும் திறமை வேண்டும். அந்த "முடியாது" என்ற பாடத்தைத்தான் இப்பொழுது நாடு கற்றுக் கொண்டிருக்கிறது.

★★

# மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

15-9-53 செவ்வாய்க்கிழமை


## சிறைச்சாலையில்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஐவர் "குற்றவாளி"யாக்கப்பட்டு விட்டனர். இருண்டு கிடந்த நாட்டில் அறிவொளி பரப்பியவர்கள், மூடிக்கிடந்த சமுதாயத்தில் மறுமலர்ச்சி தூவியவர்கள், பூட்டப்பட்ட விலங்குகளைச் சுட்டிக்காட்டியவர்கள், ஆட்டிப்படைக்த ஏகபோக உரிமைகளை எதிர்த்து நின்றவர்கள், வளமற்ற நாட்டில் மறைந்து கிடக்கும் வளங்களைத் தேடிக்கண்டவர்கள், சிதறிக்கிடந்த இனத்தைச் சேர்த்துக் காட்டி, "இன்பத்திராவிடம்" என்ற எழிலோவியத்தைத் தீட்டியவர்கள், அந்த நல்லவர்களில் ஐந்து பேர்கள் ஆச்சாரியாரின் "குற்றமற்ற" அரசாங்கத்தால் "குற்றவாளி"யாக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் அவர்கள்மீது தொடுத்த வழக்கில் "வெற்றி" பெற்றுள்ளது, சட்டமன்றத்தில், "குற்றவாளிகள்" தண்டிக்கப்பட்டுச் சிறையில் உள்ளனர்.

அவர்கள் செய்த "சதித்திட்டம்", என்ன? செய்த மாபெரும் "குற்றங்கள்" யாவை?

தமிழர்களை, தமிழர்களின் உரிமைக்கிளர்ச்சிகளை, இழிசொல் கூறிப் பழித்துப்பேசிய நேரு பண்டிதருக்குத் தமிழர்களின் கண்டனத்தைத் தெரிவிக்க முன்வந்தார்கள்.

எதேச்சாதிகாரப் போக்கில், பெரும்பான்மை மக்களுக்குத் துரோகம் செய்யும் வகையில், ஆச்சாரியார் கொண்டுவந்த வர்ணாச்சிரமக் கல்வித்திட்டத்தை தி. மு. க. எதிர்த்தது, நாட்டின் எதிர்காலத்தில் ஈடுபட்டோர் அனைவரும் எதிர்த்தனர், கல்வி நிபுணர்கள் எதிர்த்தனர், நல்லறிஞர்கள் எதிர்த்தனர், நாடாள வந்த ஆச்சாரியாரின் சவுக்குக்கு நாட்டியமாடவந்த பத்து மந்திரிகள் தவிர மற்றனைவரும், எல்லா அரசியல் கட்சிகளும் கல்விக் கழகங்களும் எதிர்த்தன. ஆனால் ஆச்சாரியாரோ தனது ஆணவப்போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. எதிர்ப்புச் சக்தியை காண அந்தக் கருப்புக்கண்ணாடிக்காரர் மறுத்தார், கண்டனக்குரலை கேட்க மறுத்தார். மற்றெல்லா முறைகளும் பயனற்றுப்போக, தீர்மானங்களுக்கும், கண்டனங்களுக்கும், பெற்றோரின் வேண்டுகோள்களுக்கும் எதற்கும் பதில் கிடைக்காதுபோக, கடைசியாக அந்த காணாத கண்ணுடையார் வீட்டு எதிரே நின்றாவது, எதிர்ப்பு இருப்பதைக் காண்பார்: அருகே சென்று கண்டனக் குரலை எழுப்பினால் கேளாத காதில் விழுந்தாலும் விழும் என்ற எண்ணம் பிறந்ததும், ஆச்சாரியார் வீட்டுமுன் அமைதியான முறையில் மறியல் செய்யத் தீர்மானித்தது. அந்தத் தீர்மானம் மற்றொரு குற்றமாயிற்று.

நேரு பண்டிதருக்குத் தமிழர்களின் கண்டனத்தைத் தெரிவிக்க ரயில்நிறுத்தக் கிளர்ச்சி செய்யவும், புதிய கல்வித்திட்டத்தை எதிர்த்து ஆச்சாரியார் வீட்டுமுன் மறியல் செய்யவும், நாட்டுமக்களை, கழகத்தோழர்களைத் தூண்டினார்கள் என்று ஐவரும் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளனர். ஆச்சாரியார் அரசாங்கம் சட்ட மன்றத்தில் அவர்கள்மீது காட்டிய குற்றச்சாட்டுகள் இவை. ஆனால் அவர்கள் செய்த வேறு பல "குற்றங்களுக்காகவே" அரசாங்கம் அவர்களை அடக்கிவிட முனைந்துள்ளது.

அவர்கள்மீது வீசப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், தரப்பட்டுள்ள தண்டனைகள், அவர்கள் பணியாற்றும் கழகத்தின்மீது சாட்டப்படும் குற்றச்சாட்டுகள், அந்தக் கழகம் கொண்டுள்ள அடிப்படைக் கொள்கைகள்மீது ஏவப்படும் சட்ட அம்புகள். ரயில் நிறுத்தத்தால் கண்டிக்கப்பட்டது நேரு பண்டிதர் மட்டுமல்ல, அவரைப்போலவே ஆண்டான் மனப்பான்மையுடன் திராவிடத்தை அடிமைப்படுத்திவரும் வடநாட்டு ஏகாதிபத்தியமுமாகும். 'டால்மியா புரம்' என்ற பெயர் எதிர்க்கப்படுகிறதென்றால், வடநாட்டு முதலாளித்துவத்துக்கு எதிர்ப்பு என்று பொருள். ஆச்சாரியாரின் புதிய கல்வித்திட்டத்துக்கு மட்டுமல்ல, அந்த

எதிர்ப்பு அவர் பாதுகாக்க விரும்பும் வர்ணாச்சிரம திட்டத்தின்மீதே பாய்கிறது என்ற பயம். இவைகளை ஆச்சாரியாரை இந்த ஐந்து தலைவர்களை, நாட்டிலே கைதியான ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்களைக் குற்றவாளிகளாக்கித் தண்டனைத் தரச்செய்துள்ளது. சமூக, பொருளாதார, அரசியல் முனைகளில் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள இலட்சியங்கள், அதை நிறைவேற்றப் பாடுபட்ட எண்ணற்ற வீரர்கள் இவர்கள்மீது இதையன்பரின் சட்ட அம்புகள் பாய்கின்றன.

கல்வித்திட்ட எதிர்ப்பு மறியலையும், ரயில் நிறுத்தக் கிளர்ச்சியையும் தூண்டிவிட்டுச், சதி செய்ததாக இந்த ஐவர் மீது குற்றஞ் சாட்டப் பட்டிருக்கிறது.

சதிசெய்ததாகக் குற்றம்! எங்கே சதி செய்தார்கள்? இருட்டு அறைகளில் பதுங்கியோ, இரகசியக் கூட்டங்களில் கலந்தோ அவர்கள் சதி செய்யவில்லை. யாருக்கும் தெரியாத பயங்கரத் திட்டங்களை, இரகசியத் தீர்மானங்களை அவர்கள் நிறைவேற்றவில்லை. தங்களின் திட்டங்களையும், தீர்மானங்களையும் பற்றி, நூற்றுக்கணக்கானப் பொதுக்கூட்டங்களில் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். மாநாடுகளில் நிறைவேற்றியிருக்கிறார்கள். கூடியிருந்த லட்சக்கணக்கான மக்கள், அவற்றை ஆதரித்து, ஆரவாரித்திருக்கின்றனர். அவர்கள் செய்தது சதியாயின், அந்தச் "சதியில்" லட்சக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

அவர்கள் செய்தது சதியாயின், அத்தகைய 'சதி'யில் ஈடுபடாதவனே மக்களின் இலக்கணப்படி, விடுதலைப் போராட்ட வரலாறுகள் படி குற்றவாளியாகிறான்.

நாட்டுமக்களின் சிந்தனையைக் கிளறி, சமுதாயத்தில் புது விழிப்பை உண்டாக்க முயன்றவர்களில் மிகப்பலர் இதேபோன்று "சதிகாரர்களென" நாடாளும் சட்டத்தால் குற்றஞ் சாட்டப்பட்டு, தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். ஏதன்ஸ் நகரமக்களைக் கூப்பிட்டு, அவர்கள் கொண்டிருந்த தவறான கருத்துக்களைத் திருத்த முயன்றதற்கு சாக்ரடீசை ஏதன்ஸ் நகர அரசாங்கம் போற்றவா செய்தது? தனது மயக்கப் பேச்சால், மக்களின் மனதைக் கெடுத்துவருகிறான் எனச் சாக்ரடீஸ் சட்ட மன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டார். இவரைப்போல நல்லவர்கள் பலர், அவ்வப்பொழுது நாடாண்டவர்களால் சதிகாரர்களென குற்றம் கற்பிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர். கல்லடிபட்ட டெமாக்ரிடஸ், கருவிஷம் குடித்த சாக்ரடீஸ், சிறையிலே தள்ளப்பட்ட கலிலியோ, செந்தீயில் துடித்த புரூனோ, இவர்களனைவரும் அந்தந்தக் காலத்தில் சதிகாரர்களாகவும், குற்றவாளிகளாகவும் இருந்தனர். ஆனால் சட்டம் தந்த தீர்ப்பை சரித்திரம் ஏற்றுக்கொள்வதில்லை. நேற்றைய சதிகாரர்கள் நாளைய வீரர்களாக ஆகின்றனர். ஒரு அரசாங்கத்தால் குற்றவாளியெனத் தண்டிக்கப்பட்டவனுக்கு, மறு அரசாங்கம் நினைவுச்சின்னம் ஏற்படுத்திப் பெருமைப்படுத்துவதுண்டு.

ஐவர்மீது நடந்த வழக்கில் தண்டனை தரப்பட்டதும், "இது போதாது!" என்று அரசாங்க வக்கீல் முறையிட்டார். அவர்கள் செய்த குற்றங்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை குறைவு என்பது அந்த சட்டநாதருடைய சஞ்சலம். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டதும், போதாது என்ற சொல் வேறொரு திக்கிலிருந்தும் கிளம்பியுள்ளது. அதுதான் சிறைச்சாலை. முதலில் ஐந்துபேரைப் பிடித்து அடைத்தார்கள், மறுநாள் அந்தச் சிறைச்சாலைக்குள் ஐயாயிரம் பேரல்லவா மொய்த்துக்கிடந்தனர். "இடம் போதாது" என இருந்த கைதிகளை வெளியேற்றிவிட்டல்லவா, அறப்போர் வீரர்களுக்கு வரவேற்பு தரவேண்டியிருந்தது!

அண்ணா பேசுகிறார், எழுதுகிறார், மக்களைத் தூண்டுகிறார் என்று சிறையிலே தள்ளிவிட்டது அரசாங்கம். ஆனால் அது நினைக்கிற முழுப்பலன் கிடைக்கிறதா என்றால், கிடையாது. "அண்ணா பேசுகிறார்" என்று ஓரிடத்தில் கூடிநின்று, சொற்பொழிவை, செந்தமிழின் தேன் சுவையை, புதுமைக்கருத்துக்கள் நிறைந்த புத்தமுதை, வீரத்தை, விவேகத்தை, வேறெவரும் தராத விளக்கங்களை, புதியதொரு எழுச்சியை, விழிப்பை, இன்பத்திராவிடத்தின் எழிலோவியத்தை மக்கள் பெற்றனர். அண்ணா அவர்கள் சிறைப்படுத்தப்பட்டார். ஆனால் பரப்பிய கருத்துக்கள் அரசாங்கத்தால் சிறையெடுக்கப்பட முடியவில்லை, மக்கள் இதயங்களில் பலநாள் முன்பே அவை சிறையெடுக்கப்பட்டுவிட்டன. அண்ணா சிறைக்குள் சென்

றார். அவர் சொல்லிய வார்த்தைகள் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. மக்களால் இன்று அண்ணாவின் பேச்சை ஓரிடத்தில் நின்று கேட்கமுடியாது, ஆனால் தனித்திருக்கும் ஒவ்வொருவரும், "அண்ணா சிறைக்குள்" என்று எண்ணுகிறபொழுது, அவருடைய அடக்கமான உருவம், புன்னகை தவழும் முகம், அவர்கள் மனக்கண்முன்னே வருகிறது. உடனே அண்ணா பேச ஆரம்பித்துவிடுகிறார். ஒரு அண்ணா சிறையிலே அடைக்கப்பட்டார். ஆனால் நாட்டு மக்களிடை ஆயிரக்கணக்கில் "அண்ணா" உலவுகிறார். பேசுகிறார், உடனே வாடிய முகம் மலருகிறது, தளர்ந்த தோள் நிமிர்கிறது. அவர் நேரில் பார்த்தால் எவ்வளவு பலன் தருமோ அதைவிடப் பன்மடங்கு அதிகமான அளவு மனக்காட்சியில் நிற்கும் அண்ணா, சிறைக்கதவுகளை விலக்கிக்கொண்டு, நம் சிந்தனைத் திரையிலே தோன்றும் அண்ணா செய்துவிடுகிறார்.

முல்லைச் செடிக்கு ஆச்சாரியார் வேலியிடுகிறார்! அதனால் செடியின் பக்கத்தில் யாரும் போகமுடியாமல் தடுக்கலாமே யன்றி, முள் வேலியால் முல்லையின் மணம் பரவுவதை அவரால் தடைசெய்ய முடியாது. அதைப்போல் அறிஞர் அண்ணாவைச் சிறை செய்வதால், செயற்குழு உறுப்பினர்களைத் தண்டிப்பதால், கழகத்தின் வளர்ச்சி குறைந்துவிடாது, மக்களின் ஆர்வங் குன்றிவிடாது. ஆச்சாரியார் அடக்குமுறை அதிகரித்தால், நம் தலைவர்களிருக்குமிடம் நோக்கி நாமும் செல்வோம் என்று இன்னும் ஆயிரக்கணக்கான வீரர்களை சிறைச்சாலை நோக்கி வரவேற்பதாகவே அது முடியும்.

சென்னைச் சிறையில் ஐவரும், மூன்றுமாத காலத் தண்டனை பெற்று அடைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சி சிறையில் கலைஞர் கருணாநிதி ஆறுமாதத் தண்டனையுடன் உள்ளேயிருக்கிறார்.

கவிஞர் கண்ணதாசன் அன்பில் தர்மலிங்கம் போன்றோர் மீது, கடுமையான செக்ஷன்களின் கீழ், வழக்குத் தொடரப்பட்டுள்ளது. தூத்துக்குடியில் நூற்றுக்கு மேற்பட்ட தோழர்கள், பல கடுமையான குற்றச்சாட்டுகள் மீது, காவற் கூடத்தில் அல்லற்படுகின்றனர்.

தடியடித் தாண்டவம் துப்பாக்கிப் பிரயோகம், ஆறு பிணங்கள், நூற்றுக்கணக்கான வீரர்களுக்குப் படுகாயங்கள், மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு சிறைவாசம், இவ்வளவுடன் ஆச்சாரியாரின் ஆதிக்கம் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. மேற்கொண்டும் பல பயங்கர குற்றங்களைச் சுமத்தி தண்டிப்பதில் கண்ணுங் கருத்துமாயிருக்கிறது.

அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதாலும், சிறைச்சாலையை நிரப்பிவிடுவதாலும், மக்களிடை வளர்ந்துவரும் கட்சியை, அதன் இலட்சியங்களை அழித்துவிடுவதென்று ஆச்சாரியார் திட்டமிடுகிறாரென்றால்—அந்தரங்கமாக மிகப்பெரும்காரியங்களைச் சாதிக்கவல்லத் திட்டங்களை நிர்மாணிப்பதில் அவருக்கு யாரும் இணை கிடையாது— அது அவருக்குப் பெரும் ஏமாற்றத்தை அளிக்குமென்பது நிச்சயம். அடக்குமுறையும் சிறைச்சாலையும் எந்த ஆணவ ஆட்சியையும் காப்பாற்றியதில்லை. மாறாகச் சரிந்துவரும் ஆதிக்கத்தை வேகமாகக் கீழே இழுத்துவருவதற்கு வேண்டுமானால், அவை பயன்பட்டிருக்கின்றன. பிரெஞ்சு மன்னர்கள் லூயி பரம்பரையினரிடம் பாஸ்டிலி என்ற பயங்கரச் சிறை இருந்தது. ருஷ்ய நாட்டு மன்னன் ஜாரால், தனக்கு எதிராக இருப்பவர்களையெல்லாம் சைபீரியா பனிப் பாலையிலிருந்த சிறைச்சாலைகளுக்கு அனுப்ப முடிந்தது, சர்வாதிகாரி ஹிட்லர் ஆட்சியில், ஜெர்மன் நாட்டில் சிறைச்சாலைகள் பலப்பல உண்டாக்கப்பட்டன. ஆனால் அந்தச் சிறைச்சாலைகளெல்லாம் ஆதிக்க வெறியர்களின் கொடுங்கோன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினவேயன்றி, விடுதலை இயக்கங்களை, புரட்சிக் கருத்துக்களை அழித்துவிடும் ஆற்றல் இன்றி இருந்தன. லூயி மன்னனும் ஜாரரசனும், இட்லரும் தோற்றுப்போன இடத்தில் இன்று ஆச்சாரியார் ஆரம்பித்திருக்கிறார். கொடுமைக் கோட்டையிலே உலவுகிறார், சிறைச்சாலைகளைப் பார்வையிடுகிறார்.

அடக்குமுறைக்காகச் சிறைச்சாலை பயன்படுத்தப்படுகிறது ஆனால் சிறைச்சாலையிலேயே, அந்த அடக்குமுறை அழிந்திருக்கிறது, சிறைச்சாலையிலே விடுதலை இயக்கங்கள் வளர்ந்திருக்கின்றன. இந்த வரலாற்றுப் பாடத்தை ஆச்சாரியார் வெகு விரைவில் கற்றுக்கொள்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வரவேற்கிறோம்

ஆச்சாரியாரின் வர்ணாச்சிரமக் கல்வித் திட்டத்தை எதிர்த்தும், ஜூலை 15 ரயில் நிறுத்தக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டும் சிறை சென்ற வீரர்களில் பலர், விடுதலையாகி வெளி வந்துள்ளனர். திராவிட முன்னேற்றக் கழகம் செய்த முடிவுகளை நிறைவேற்ற வேண்டி, போராட்டங்களில் ஈடுபட்டு, கஷ்ட நஷ்டங்களிடை சிறைபுகுந்து, மீண்டும் வந்துள்ள அவர்களை வரவேற்கிறோம். அவர்கள் காட்டிய கடமையுணர்ச்சிக்கும், உறுதி மனப்பான்மைக்கும், நாடும் நாமும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தலைவர்கள் பிரிக்கப்பட்டு, முன்னதாகச் சிறைப்பட்டபோதிலும், கழகம் செய்த முடிவுகளை மிக வெற்றிகரமாக அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். கழகத்தின் கண்ணியமும், மதிப்பும் அதிகப்படும் விதத்தில் அவர்கள் கடமையாற்றியிருக்கிறார்கள். போராட்டத்தில் அவர்கள் காட்டிய தீரமும், காப்பாற்றிய கட்டுப்பாடும் கழக வரலாறில் பாராட்டப்பட வேண்டிய கட்டமாகும். தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டாலும், கிளர்ச்சிகள் சிதையவில்லை. கழகம் எடுத்த முடிவுகள் கடைசி வரை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தடியடியோ, கண்ணீர்ப்புகையோ, துப்பாக்கிக் குண்டோ, தண்டனைப் பட்டியலோ எதுவும் அவர்களைப் பயமுறுத்தவில்லை. ஆச்சாரியார் தந்த அடக்குமுறையை தாங்கிக்கொண்டு, கடமையைச் செய்தார்கள், சிறைச்சாலையை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைக் கழகமாக ஆக்கினார்கள். அவ்வாறு ஆங்காங்கு கிளைக்கழகங்களை அமைத்துவிட்டு திரும்பும் அறப்போர் வீரர்களை, நம் ஆருயிர்த் தோழர்களை, கழகத்தின் கண்மணிகளை, நாட்டின் நல்லதம்பிகளை வரவேற்கிறோம் பூரிப்புடன், வாழ்த்துகிறோம் பெருமையுடன், பாராட்டுகிறோம் உழுவலன்புடன்.

பாராட்டுகிறோம், வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம். அப்படிச் செய்யும்பொழுது, தோட்டக்கச்சேரிகள் நடத்தியோ, தேநீர் விருந்துகள் வைத்தோ, ரத்ன கம்பளங்கள் விரித்த கூடத்தில் வண்ண விளக்குகள் அலங்கரிக்க, ஜரிகை மாலை சூட்டி, கனதனவான்கள் கைலாகுதர, வெள்ளித் தட்டில் தங்க எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட உபசாரப் பத்திரங்களை வாசித்துத்தர முடியாது. எப்பொழுதும்போல் கரடுமுரடான ஒரு மேட்டு நிலத்தில், உழைத்துவிட்டு சிறிது ஓய்வுகாணும் நேரத்தில் கூட்டம் கூடி, சிறைசென்று மீண்டவர்களை வரவேற்கிறோம். சிறையில் வாடுபவர்களைப் பற்றிப் பேசுகிறோம். பசும் புல்தரையே நமக்குக் கிடைத்த ரத்னகம்பளம். வானத்தில் மின்னிடும் நட்சத்திரங்களும் ஒளிவிடும் முழுநிலவுமே நமக்குக் கிடைத்த வண்ண விளக்குகள். ஜரிகை மாலைக் கிடைக்காது, ஏழ்மையெனும் நாறில் அன்பு எனும் மலர்கள் தொடுக்கப்பட்டது போன்று இருக்கும் சிறு மல்லிகைத் தொடர்கள், ஆனால் மணமுள்ள மலர்ச் சரங்கள். வந்திருப்பவர்களைக் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தும்பொழுது, "இவர் ஒரு சர், இவர் ஒரு ராஜப்பிரமுகர், இவர் அமெரிக்காசென்று திரும்பியவர், இவர் ஒரு ஹைகமிஷனர்" என்று சொல்லமுடியாது. "இவருக்கு மூன்று மாதம் கிடைத்தது, இவருக்கு ஆறுமாதம், இவர் வேலூரிலிருந்து வருகிறார், இவர் திருச்சி சிறையில் கல்லுடைத்துத் திரும்பினார்" என்றுதான் சொல்லமுடியும்.

சிறை சென்று மீண்டவர்கள், சிறையில் தண்டனையேற்று வாடுபவர்கள், விசாரிக்கப்படாமல் இன்னும் காவலில் கொடுமைப்படும் தோழர்கள் இவர்கள் தொகை கணக்கிலடங்காது. பெயர்கள் கூறப்புகுந்தால் பட்டியல் நீண்டுகொண்டே போகும். அந்தப் பட்டியலில் தங்கள் பெயரைப் பொறிக்க, ஒவ்வொருவரும் ரத்தஞ்சிந்தியும், தடியடிதாங்கியும், உயிரைத் தந்தும், உடைமைகளை இழந்தும் பாடுபட்டிருக்கின்றனர். அவர்கள் ஏற்றுக்கொண்ட கஷ்ட நஷ்டங்கள் தங்களுக்காகவல்ல, ஊராருக்காக, பிற்கால சந்ததிக்காக; வருங்கால இன்பத்திராவிடத்துக்காக. அந்த மாவீரர்களை—மாசற்ற மணிகளை மதிப்புடன் போற்றுகிறோம், மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம், மட்டற்ற அன்புடன், தோழமையுடன் வாழ்த்துகிறோம்.

★★

# ராபர்ட் எம்மெட்

குற்றவாளிக் கூண்டில் அவன் நின்றான். 26 வயது இளைஞன், கட்டிளங் காளை.

அவன் செய்த குற்றமென்ன ?

கொலையோ, கொள்ளையோ, திருட்டோ, புரட்டோ, எதுவும் அவன் செய்யவில்லை. கண்டோரைக் கைப்பிடித்து இழுக்கவில்லை, வந்தோரை நிறுத்தித் துன்புறுத்தவில்லை, வழிப்பறி செய்யவில்லை, இழிவுச் செய்கைகளில் ஈடுபடவில்லை.

அவன் செய்த குற்றமென்ன ?

அவன் கண்ணியமான குடும்பத்தில் பிறந்தவன். தந்தை ஊராரால் குணவான் எனப் போற்றப்படும் ஒரு டாக்டர். அவன் படித்தவன், பண்புடன் பழகியவன், இரக்க குணமுடையவன், இழிவு வந்தால் எதிர்த்து நிற்கும் துணிவுடையவன். தாய்நாட்டைப் போற்றினான். நாட்டுமக்களைப் பாதுகாக்க எண்ணினான்!

இவையெல்லாம் குற்றங்களல்லவே!

ராபர்ட் எம்மெட். அதுதான் அந்த இளைஞனின் பெயர். அவன் அடிமைப்பட்டுக்கிடந்த அயர்லாந்தை விடுவிக்க முயன்றான். ஆட்டிப் படைத்த பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான். தாய்நாட்டினரைத் தட்டி எழுப்பினான், தன்மானங் காக்க முன் வந்தான்.

இவைகள் குற்றங்களா ?

நீதியின்படி, நேர்மைப்படி, பிற்கால மக்கள் தீர்ப்புப்படி, அவன் குற்றவாளியல்ல என்பதோடு நிற்கவில்லை, அவன் ஒரு மாவீரன் எனப் போற்றப்பட்டான். ஆனால் அன்றிருந்த அரசாங்கம், அடிமைப்பட்டுக் கிடந்த மக்களை கொடுமையால் அடக்கிவந்த அரசாங்கம் அந்தச் சிலனை ஒரு குற்றவாளியாக்கத் தீர்மானித்தது. குற்றவாளியாக்கி, கூண்டிலே நிறுத்தியது.

குற்றவாளிக் கூண்டில் அவன் நின்றான், புன்னகையுடன், பெருமிதத்துடன், சாட்டப்பட்டக் குற்றங்களின் தொகைகளைக் கண்டு, "இவ்வளவு காரியங்கள் செய்தோமா !" என்ற ஆச்சரியத்துடன் நின்றான்.

அடிமைப்பட்ட நாட்டை விடுவிக்க முயலுவது எத்தகைய "குற்றமென்பது" அவனுக்குத் தெரியாததல்ல, அந்நியராதிக்கத்தை வீழ்த்த முயலுவது எத்தகைய "மாபெரும் குற்றம்" என்பதும் அவனுக்குத் தெரியாததல்ல. கொடுங்கோன்மையை எதிர்த்தால் கிடைக்கும் பரிசு அவன் கேள்விப்படாததல்ல. தாயகத்தின்மீது தணியாத அன்பு பூண்டான். அதன் தன்மானங் காக்கப்படவேண்டுமென்றால், "அடிமைத்தளை முறியடிக்கவேண்டும், அனைவரும் நன்கு வாழவேண்டும்" எனப் பாடுபட்டால், இந்த "மாபெரும் குற்றங்கள்" அவனுக்குத் தரப்போகும் தண்டனை அவன் எதிர்பார்க்காததல்ல.

தூக்குத்தண்டனை.

அந்தத் தண்டனையை எதிர்பார்த்துதான் அவன் அந்தக் "குற்றங்களைச்" செய்ய ஆரம்பித்தான். இப்பொழுது அந்தத் தண்டனையைக் கண்டு மனங்குலையவில்லை, அவன் உறுதி குலையவில்லை.

எதிரே குற்றஞ்சாட்டும் சர்க்கார் வக்கீல், அவர்முன் அவன்செய்த குற்றங்களின் கனத்தைக் காட்டுவதுபோன்று ஏராளமான சட்ட புத்தகங்கள், உயரத்தில் தண்டனை தரும் நீதிபதி, வெளியே தூக்குமேடை.

ராபர்ட் எம்மெட் அந்த நிலையிலும் சிறிதும் பின்வாங்கவில்லை. மாறாக முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகக் கொடுங்கோன்மையைச் சாடினான்; அடிமைப்பட்ட மக்களைக் கூவி அழைத்தான். கையில் விலங்கு அசைந்தது, ஆனால் தாயகத்தின்மீது பூட்டப்பட்டிருக்கும் விலங்குகளை அவன் மறந்துவிடவில்லை. தூக்கு

மேடை அவனை அழைத்தது, போகும்பொழுதும், விடுதலைப்போருக்கு நாட்டுமக்களை அழைத்துக்கொண்டு சென்றான்.

* * *

ராபர்ட் எம்மெட் 1778-ம் ஆண்டில் அயர்லாந்தின் தலைநகரான டப்ளின் நகரில் பிறந்தான். அவனுடைய தந்தை ஒரு பிரசித்தி பெற்ற டாக்டர், நல்ல சொத்துக்களுடன் கூடிய உயர்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ராபர்ட்டுக்கு ஒரு அண்ணன், தாமஸ் எம்மெட் என்றிருந்தான்.

சிறு வயதிலிருந்தே ராபர்ட் ஒரு பிடிவாதமும், உணர்ச்சிவேகமும் உள்ள இளைஞனாக வளர்ந்துவந்தான். படிப்பிலே மிகவும் திறமையுடனிருந்ததல்லாமல், ஊரில் நடக்கும் சிறு விஷயங்களிலும் அக்கறை காட்டிக்கவனிக்கும் பண்பும் எம்மெட்டிடம் காணப்பட்டது.

அவனுடைய 15வது வயதில் டப்ளினில் இருந்த கல்லூரியொன்றில் எம்மெட் சேர்ந்து படித்தான். கல்வியில் நல்ல ஆர்வஞ் செலுத்தியதுடன், சொற்போர் மன்றங்களில் பெரும் பங்கும் கொள்ள ஆரம்பித்தான். விரைவில் "கல்லூரியின் சிறந்த சொற்பொழிவாளனாக" எம்மெட் விளங்கினான். அஞ்சாத நெஞ்சும், நினைத்ததை வலிவுடன் வெளியிடும் ஆற்றலும் ஒன்றுசேர்ந்தால், சிறந்த பேச்சாளன் வருவதில் ஆச்சரியமில்லை. "அடிமைப்பட்டுக் கிடக்கும் அயர்லாந்து விடுதலை காணவேண்டும்" என்ற அடிப்படை குறிக்கோளே எம்மெட்டின் கல்லூரிப் பேச்சுகளில் மிகுந்து காணப்பட்டது.

அயர்லாந்து பல நூற்றாண்டுகளாக, முதலாம் எலிசபெத் காலத்திலிருந்து அன்றுவரை, இங்கிலாந்தின் ஆட்சிக்கீழ் அவதிப்பட்டுக்கிடந்தது. கடலாதிக்கம் வலுத்த இங்கிலாந்து, அயர்லாந்தை மற்ற நாட்டுத் தொடர்புகளிலிருந்து துண்டித்து, பொறியிலே அகப்பட்ட மானைப்போல, துவள வைத்தது. ஆனால் அயர்லாந்து, அடிமைச் சிறையில் அடங்கிக் கிடக்கவில்லை. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, கொடுங்கோன்மையை எதிர்த்து, அயர்லாந்தைக் கட்டுப்படுத்தும் சட்ட திட்டங்கள் அயல் நாடான இங்கிலாந்தில் தேம்ஸ் நதிக்கரையில் முடிவுசெய்யப்படுவதை எதிர்த்து, அடிக்கடி கிளர்ச்சிகள், போராட்டங்கள் எழுந்தபடி தான் இருந்தன. எனவே இராணுவ உதவி கொண்டுதான், இங்கிலாந்து அயர்லாந்தை ஆண்டுவர முடிந்தது. அதற்காக மிகுந்த செலவில் படையொன்று அயர்லாந்தில் வைக்கப்பட்டிருந்தது. அதையொட்டி, கிளர்ச்சிகளை ஒடுக்கக் கடுமையான அடக்குமுறைச் சட்டங்களும், விசாரிக்க தனி சட்ட மன்றங்களும், தண்டனைகளை நிறைவேற்றி வைக்க நிறைய சிறைச்சாலைகளும், தூக்கு மேடைகளும் உண்டாக்கப்பட்டிருந்தன. அயர்லாந்து நாட்டில், விடுதலை இயக்கத்தில் ஒருவன் சேர்கின்றானென்றால், தூக்குக் கயிற்றைத் தன் கழுத்தின்மீது சுற்றிக்கொண்டுவிட்டான் என்றுதான் அர்த்தம்.

ஆனால் மக்கள் மனதில் ஊறிவிட்ட விடுதலை உணர்ச்சியை சட்ட திட்டங்களாலும், அடக்குமுறையின் அளவாலும் எடுத்துவிட முடியாது. கிளர்ச்சிகள் நடந்தபடிதான் இருந்தன. அடக்குமுறைகள் வளர்ந்தபடி தான் இருந்தன. துப்பாக்கிகள் மின்னும், குண்டுகள் பாயும், மக்கள் விழுவர், விடுதலைவீரர்கள் குற்றவாளிகளாக்கப்படுவர், சட்ட புத்தகங்கள் பேசும், "நீதிபதியின்" கரம் அசையும், தூக்குமேடையில் பிணங்கள் ஊசலாடும். ஆனால் இவற்றாலெல்லாம் விடுதலைப் போராட்டம் ஒழிக்கப்படவில்லை. ஒரு கட்டத்திலிருந்து மறு கட்டத்துக்குத் தாவியபடி இருந்தது. சில காலம், "நீறுபூத்த நெருப்பு போல்" கிளர்ச்சி அடங்கிக்கிடக்கும். பின் சிறிது காற்று வீசியதும், முன்னைவிடக் கடுமையான அளவில் தீமூண்டு, எங்கும் பரவும். இது அயர்லாந்தி வரலாற்றில் பழக்கமான பகுதியாயிற்று.

ஒரு நாட்டின் விடுதலை உணர்ச்சியை அடக்க நினைக்கும் ஆதிக்கக்காரர்கள், அந்த நாட்டு மக்களின் உயிர்நாடியான கல்வித் துறையில்தான் தங்கள் ஆதிபத்தியத்தை நிலைநாட்ட முற்படுவார்கள். அந்தவகையில், அயர்லாந்து நாட்டின் கல்விமுறையில் அரசாங்கத்தின் கண்காணிப்பும், கடுங்காவலும் இருந்தன. அரசாங்க எதிர்ப்புணர்ச்சி மாணர்களிடை பரவுவதைக் கண்ட அரசாங்கம், ஒரு கமிட்டியை நியமித்து, கல்லூரியில் படிக்கும் ஒவ்வொரு மாணவராக அதன்முன் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அத்தகைய விசா

ரணைக் கமிட்டியொன்று எம்மெட் படித்து வந்த டப்ளின் கல்லூரிக்கு 1798-ல் வந்தது. அதன் நடவடிக்கைகள், போப்பாண்டவரால் நியமிக்கப்பட்ட இன்க்யுசிஷன் என்ற மதச் சபையைவிடக் கடுமையானதாக இருந்தன.

ஒவ்வொரு மாணவனும் அதற்குமுன் கொண்டுவரப்பட்டான். அவனுடைய அரசியல் கொள்கைகள், அரசாங்கம் பற்றிய கருத்துக்கள், அவனுடைய நண்பர்கள், அண்ணன், தம்பியர், சுற்றத்தார் இவர்களுடைய அரசியல் கட்சிகள், அவனுடைய நடவடிக்கைகள் இவை போன்றவைத் துருவித் துருவி ஆராயப்பட்டன. சிறிது மாறுபாடு காணப்பட்டாலும், அந்த மாணவன் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டான்.

இந்த விசாரணைக் கமிட்டி கண்டு எம்மெட் கொதித்தெழுந்தான். தனிப்பட்டவர்களின் கொள்கையையும், எண்ணங்களையும் பற்றிக் கேட்க அரசாங்கத்துக்கு உரிமை கிடையாது. எம்மெட்டின் பெயர் கூப்பிடப்பட்டபொழுது, அந்த விசாரணைக் கமிட்டி முன்போக மறுத்தான். போகாவிட்டால், கல்லூரியிலிருந்து வெளியேற்றப்படும் என அறிவிக்கப்பட்டது. "அவர்கள் வெளியேற்றுவதென்ன, நானாகவே வெளியேறுகிறேன்" என்று எம்மெட் கல்லூரியினின்றும் வெளியேறினான். அவன் கல்லூரியில் சேர்ந்து ஐந்து ஆண்டுகள் முடிந்து பட்டம் பெறும் தருவாயிலிருந்தான். பட்டத்தைவிடத் தன்மதிப்பைப் பெரிதென மதித்து எம்மெட் வெளியேறி விட்டான்.

எம்மெட் வெளியே வந்த 1798-ம் ஆண்டில், அயர்லாந்தில் மாபெரும் கிளர்ச்சி மூண்டு அரசாங்கத்தைப் பயமுறுத்தியது. இந்தக் கிளர்ச்சிக்கு மிக முன்னணியில் இருந்தது யுனைடெட் ஐரிஷ் யூனியன் (ஐக்கிய அயர்லாந்து சங்கம்) என்பதாகும்.

இந்தச் சங்கத்தில் மிக முக்கிய பங்கேற்றத் தலைவர்களில் ஒருவராக ராபர்ட் எம்மெட்டின் தமையனான தாமஸ் எம்மெட் இருந்தார். தாமஸ் எம்மெட் சட்ட கல்லூரியில் தேர்ச்சி பெற்று, சிறந்த வழக்கறிஞராக இருந்ததுடன், நாட்டின் விடுதலைப் போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொண்டார். கிளர்ச்சி துவங்கும் என்ற அறிகுறி தோன்றியதும், தாமஸ் எம்மெட்டும், மற்றும் முக்கிய தலைவர்களும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

தலைவர் உள்ளே அடைக்கப்பட்டும், குறிக்கப்பட்ட கிளர்ச்சி நிற்கவில்லை. ஆங்காங்கு போராட்டம் தலை தூக்கியது, அரசாங்கச் சட்டங்கள் மீறப்பட்டன. ஆயுதங்கள் ஏந்திய விடுதலைப் படையினர் ராணுவத்தின் தாக்குதலை எதிர்த்து நின்றனர். ராணுவச் சட்டம் அமுலாக்கப்பட்டு, அடக்குமுறையின் கொடுமை அதிகரித்தது. மக்கள் வதைக்கப்பட்டனர், குடிசைகள் கொளுத்தப்பட்டன, கிராமங்கள் சூறையாடப்பட்டன, நாடு சுடுகாடானது. அயர்லாந்து நகர வீதிகள் ரத்தத்தால் நனைந்தன. ஊர்ப்புறங்களில் பிணங்கள் தொங்கின. மிகக் கொடுமையான, மிருகத்தனமான அடக்குமுறையால், 1798-ல் மூண்ட அயர்லாந்து கிளர்ச்சி அடக்கப்பட்டது. கிளர்ச்சிக்குப்பின், அரசாங்கத்தின் மீதும், அதன் சட்ட திட்டங்கள் மீதும் நாட்டு மக்களுக்கு அடங்காத வெறுப்பு உண்டானது. கிளர்ச்சிக்குப்பின் மக்களின் மனநிலையைச் சித்தரிக்க வந்த வரலாற்றாசிரியர் ஒருவர், எதேச்சாதிகார அரசாங்கம் அப்பொழுது (1798-ல் நடந்த கிளர்ச்சியின்போது) நடத்திய செய்கைகளை, வரலாறு எவ்வளவுதான் முயன்றாலும், மறைத்துவிட முடியாது, அரசாங்கத்தின் போக்கு அயர்லாந்து மக்களுக்கு, மறக்கமுடியாத பாடமொன்றைத் தந்தது. 'அரசாங்கத்தின் சட்டங்கள் மக்களைக் கொடுமைப்படுத்த இருக்கின்றனவேயன்றி, காப்பாற்ற அல்ல" என்ற எண்ணம் மக்களிடை வேரூன்றிவிட்டது. அவை, பெருந்தன்மையும், கண்ணியமும் உடைய பலரைக் குற்றவாளிகளாக்கின; அந்தக் குற்றவாளிகள் ஒவ்வொருவரும் பின்பு வீரர்களாகிவிட்டனர்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

விடுதலைக் கிளர்ச்சியும், அரசாங்கத்தின் கொடுமையும், அதை எதிர்த்து மக்கள் காட்டிய வீர உணர்ச்சியும் இளைஞன் எம்மெட் உள்ளத்தில் மாறாத காட்சிகளாகிவிட்டன. அவனுடைய அண்ணன் தாமஸ் எம்மெட், கிளர்ச்சிக்குப்பின் விடுதலையானதும், அரசாங்கப் பிடியிலிருந்து தப்பி அமெரிக்காவிற்குச் சென்றுவிட்டார். விடுதலை இயக்கத்தில் ராபர்ட் எம்மெட்டும் ஈடுபட்டு, நாட்டிச்

நாடெங்கும் சென்று தன் கடமையை ஆற்றிவந்தார். பெயர்பெற்ற சொற்பொழிவாளராயிருந்த எம்மெட்டின் பேச்சுக்கள் நாட்டு மக்களுக்குப் புது ஊக்கத்தை அளிப்பதாகவிருந்தன.

1799-ல் எம்மெட்டைக் கைதுசெய்யுமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. கைதியாகாமல் சுற்றிக்கொண்டிருந்த எம்மெட், அதற்கு அடுத்த ஆண்டு கடல்கடந்து, ஐரோப்பாவிற்குச் சென்றான்.

அயர்லாந்து விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலோர், ஆபத்து ஏதாவது வந்தால் ஐரோப்பா அல்லது அமெரிக்கா நோக்கி தப்பி ஓடிவிடுவார்கள். அதுபோல் எம்மெட்டிற்கு முன்பாக ஐரோப்பாவிற்குச் சென்ற பல ஐரிஷ் விடுதலை இயக்கத்தினரை எம்மெட் சந்தித்தான். அயர்லாந்தில் மற்றுமொரு விடுதலைப்போரைத் துவக்கவேண்டுமென, எம்மெட் அல்லும் பகலும் பாடுபட்டான். அதற்காக பணம், ஆயுதங்கள் வேறு உதவிகள், எவ்வளவு சிறியதாயினும், கிடைத்தவற்றை யெல்லாம் எம்மெட் சேர்த்துக்கொண்டான். கடைசியாக எம்மெட் பிரான்ஸ் நாடுவந்து அங்கிருந்து அயர்லாந்துக்குவந்து சேர்ந்தான்.

டப்ளின் நகரில் சில ஏற்பாடுகளைச் செய்துகொண்டு, 1803 ஜூலை 23-ந் தேதி போராட்டத்தைத் துவக்குவதென எம்மெட் திட்டமிட்டு அதன்படி மற்றவர்களுக்கும் அறிவித்தான். ஜூலை 23-ந் தேதி, எம்மெட் எதிர்பார்த்தபடி அயர்லாந்து பூராவும் எதிர்ப்புப் போர் உண்டாகவில்லை. அதற்குக் காரணம், கொடுக்கப்பட்ட அவகாசம் மிகக்குறைவாக இருந்தது, பல இடங்களுக்கு முன்கூட்டி செய்தி அனுப்பப்படவில்லை, எல்லாம் குழப்பத்திலும், புரியாத நிலையிலும் இருந்தன. மேலும் எம்மெட்டுடன் ஒத்துழைப்பதுபோல நடித்த சிலர், சர்க்காரிடம் பணம் பெற்றுக்கொண்டு உளவுகளையெல்லாம் தந்துவிட்டனர். டப்ளினில் மட்டும் எம்மெட் தலைமையில் கிளர்ச்சி வேகமாக ஆரம்பித்தது. அதுவும் இராணுவம் வந்ததும் பயனற்றுப்போயிற்று. கிளர்ச்சி தோல்வியுற்றதும் எம்மெட் தப்பி, பக்கத்திலிருந்த மலைக் குகைகளில் ஒளிந்துகொண்டான். போலிசாராலும், அரசாங்கப் படைகளாலும் எவ்வளவு முயன்றும் அவனைப் பிடிக்க முடியவில்லை.

மலைக்குகைகளில் அடைபட்டுக் கிடந்த எம்மெட், கடல் கடந்து அமெரிக்காவுக்குப் போவதென முடிவுசெய்தான். அயர்லாந்தை விட்டுப்போவதற்குமுன், தன் காதலி சாரா கரான் என்ற மங்கையைச் சந்தித்துவிட்டுப் போக விரும்பினான். சாரா கரான் விடுதலை இயக்கத்தில் மிகவும் ஆதரவுகாட்டிவந்த ஜான் பில்பாட் கரான் என்பவருடைய மகள். சாராவை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு எம்மெட்டுக்குக் கிடைத்ததால், இருவரும் காதல்வயப்பட்டனர். எம்மெட் விடுதலை இயக்கத்தில் ஈடுபடாமல் இருந்திருந்தால், அவர்களுடைய காதல் வாழ்வு பரிமளித்திருக்கும். ஆனால் இப்பொழுதோ அரசாங்கத்தால் தேடித் திரியப்படும் குற்றவாளியாக எம்மெட் இருந்தான். காதலர் இருவரும் சந்தித்து, பின் ஒன்று சேர்ந்து அமெரிக்காவுக்குப் போவதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. சாராவும் தன் காதலனுடன் கடல் கடந்துபோகத் தயாராக இருப்பதாகச் செய்தி அனுப்பினாள். காதலியைச் சந்திக்க எம்மெட் தன் மறைவிடத்தை விட்டு வெளிவந்து, குறிப்பிட்ட இடத்துக்கு வந்தான்.

அந்த இடத்தில் அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. காம்பற்றித் தழுவத் துடித்துக்கொண்டிருக்கும் சாரா அல்ல, துப்பாக்கித் தாங்கிய போலீசார் காத்திருந்து, அவன் கரங்களில் விலங்கை மாட்டி, இழுத்துச் சென்றனர். எம்மெட்டுக்கு உதவி போல இருந்தவனே, காதலர் இருவரையும் ஏமாற்றி, அரசாங்கத்துக்குத் தகவல்தந்து எம்மெட்டைக் கைதியாக்கச் செய்தான்.

எம்மெட் விசாரிக்கப்பட்டு, அரசாங்கத்துக்கு எதிராகச் சதிசெய்ததாக தூக்குத் தண்டனை தரப்பட்டான். புன்முறுவலுடன் தண்டனையை ஏற்றுக்கொண்டு, தாய்நாட்டின் விடுதலைக்காகத் தன் உயிரையே எம்மெட் காணிக்கையாகத் தந்தான்.

தண்டனையை ஏற்றுக்கொள்ளுமுன், கோர்ட்டில் எம்மெட் செய்த சொற்பொழிவு உலகப் பிரசித்திபெற்ற பேச்சுகளில் ஒன்றாகும். (அந்த மாவீரனின் கடைசி பேச்சு அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது.)

(வழக்கு முடிவில், மரணதண்டனையை ஏற்றுக்கொள்ளுமுன், எம்மெட் சட்ட மன்றத்தில் செய்த பேச்சு கீழே தரப்படுகிறது.)

"நீதிபதி அவர்களே! சட்டத்தின்படி, எனக்கு மரண தண்டனை ஏன் தரக்கூடாது எனக் கேட்கப்பட்டிருக்கிறேன். உங்களுடைய தீர்ப்பை மாற்றும் வகையிலோ, அல்லது எனக்குத் தரவிருக்கும் தண்டனையின் கடுமையைக் குறைக்கும் விதத்திலோ, நான் எதுவும் சொல்லப்போவதில்லை. எனக்குக் கிடைக்கப் போகும் தண்டனையை ஏற்றுக்கொள்ள நான் தயாராயிருக்கிறேன். ஏதாவது நான் சொல்ல நினைத்தால், என் உயிரினும் மேலாக மதித்து எதற்காகப் போராடினேனோ, எதை அழித்து விட வேண்டுமென்று நீங்கள் முயற்சிக்கிறீர்களோ அதைப்பற்றியதாகத்தான் இருக்கும். என்மீது வீசப்பட்டிருக்கும் பொய்யும், இழிவும் கலந்த குற்றச்சாட்டுக்களிலிருந்து என் பெயரைக் காத்துக்கொள்ள நான் ஏதாவது சொல்லலாம். நீங்கள் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்துகொண்டு, நான் கூறுபவைகளைத் தெளிந்த மனதுடன் கேட்டு உண்மை நிலையை புரிந்துகொள்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. புயலும் அலையும் கொந்தளிக்கும் கடலில் அமைதியானதொரு புகலிடத்தைக் காணமுடியாது. அதுபோல, என்மீது மாறுபட்ட எண்ணங்களும், தவறான கருத்துக்களும் கொண்ட இந்தச் சட்டமன்றத்தில் ஒரு அமைதியான விசாரணையும் நல்ல தீர்ப்பும் கிடைக்குமென்றும் நான் நம்பவில்லை. குற்றவாளியென்று முடிவுகட்டப்பட்டு, மரண தண்டனை தரப்பட்டால், அதை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வேன், எந்த முடிவுக்கும் தயாராக உள்ளேன்.

## குற்றம் எங்கேயிருக்கிறது?

இந்தச் சட்ட மன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருப்பினும், என் உடலுக்குத் தண்டனைதரக் கூடுமேயொழிய, என் கருத்துக்களுக்கு, பண்பாட்டுக்கு எத்தகைய குற்றமும் அவ்வளவு சுலபத்தில் தந்துவிட முடியாது. குற்றம் எங்கேயிருக்கிறது? என் நடவடிக்கைகளிலா, அல்லது இந்தச் சட்டமன்றத்தின் தீர்ப்பிலா இதை வருங்காலம் நிச்சயிக்கும்.

என் நிலையில் இருக்கும் ஒருவன், வாழ்வில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை மட்டுமல்ல, எதிர் நிற்கும் விரோதமான எண்ணங்களையும், தப்பபிப்பிராயங்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. மனிதன் இறக்கிறான், ஆனால் அவன் புகழ் நிலைபெறுகிறது. என் தாய்நாட்டவரின் கண்முன் என்னைப்பற்றிய மதிப்பு குறையாதிருக்க, என்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களைப்பற்றி சில விளக்கங்கள் தர வேண்டியவனாயிருக்கிறேன்.

## வீரர்களின் பட்டியல்

எனக்குக் கிடைக்கும் மரணதண்டனையை நான் ஏற்றுக்கொள்ளும்பொழுது, தாயகம் உரிமைபெறப் போர்க்களங்களிலும், தூக்கு மேடைகளிலும் மரணத்தைத் தழுவிய மாவீரர்களின் நீண்ட பட்டியல் என் கண்முன் வருகிறது. அவர்கள் சிந்திய ரத்தம், அவர்கள் செய்த தியாகம் என்றும் வீண்போனதில்லை. எனது செய்கையால், அந்த உத்தமர்களுடன் நானும் கலந்துகொள்ளுகிறேன் என்ற மகிழ்ச்சியுடன் நான் நிற்கிறேன். அதிகாரவெறி கொண்டலையும் இந்த அரசாங்கம் எனக்குத் தரும் தண்டனையைத் துச்சமாக மதிக்கிறேன். நாட்டு மக்களைக் காட்டுமிருகங்களைப்போல அடக்கியாள நினைக்கும் இந்த அரசாங்கம், அனாதைச் சிறுவர்கள் எழுப்பும் அழுகுரல், கைம்பெண்கள் வடிக்கும கண்ணீர் எதையும் காணமறுக்கும் கொடுங்கோல் அரசாங்கம், அதன் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்துப் பேசும் எந்தக்குரலையும் அடக்குமுறையால் அடக்கிவிடமுயலும் அரசாங்கம்,—அந்த அரசாங்கத்தின் அழிவுக்காலம் வெகுதூரத்திலில்லை. மரணதண்டனையை நான் ஏற்றுக்கொள்ளும் பொழுது, எனது பெயரும் முடிவும் இந்த அரசாங்கத்தின் கொடுமையை எதிர்த்து நிற்கும் எதிர்கால உரிமை வீரர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தரும் நினைவுச்சின்னமாக அமைந்தால், அதுவே எனக்குப் போதுமானது.

(இந்த இடத்தில் நீதிபதி குறுக்கிட்டு, "இத்தகைய ஆவேசமும், தீங்கும் உடைய வார்த்தைகளால் ஒருவருடைய கனவுகளைப் பெற்றுவிடமுடியாது" என்று கூறி, குற்ற

வாளியை அடக்கினார். எம்மெட் மேற்கொண்டு தொடர்ந்து பேசினான்.)

## தூய நோக்கம்

"உண்மையான புனிதமுறைக்கு, தெய்வ நீதிக்கு நான் முறையிட்டுக்கொள்ளுகிறேன், எனக்கு முன்னால் செ... ருள்ள உரிமை வீரர்கள் சிந்திய இரத்தத்தின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நான் செய்த செயல்கள், பேசிய பேச்சுக்கள் எல்லா... அடிமைப்பட்டுக் கிடக்கும் என் தாயகம் விடுதலைபெறவேண்டும், அடக்குமுறை ஆட்சியின் கொடிய பிடிகளிலிருந்து மக்கள் விடுதலை காணவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன், தூய நோக்கத்துடன் தான் செய்யப்பட்டன. நான் சொல்பவை கனவாக, நம்பிக்கையற்றதாகச் சிலருக்குக் காணப்பட்டபோதிலும், என் தாயகமாம் அயர்லாந்து விரைவில் விடுதலையடைந்துவிடும் என்ற தளராத நம்பிக்கை எனக்கிருக்கிறது. இதை உங்களைப் பயமுறுத்த, தண்டனை தரப்போகும் உங்கள் மனதில் தடுமாற்றத்தை உண்டாக்க நான் ஒரு பொய்யை, நானுகூ நம்பாத ஒன்றைச் சொல்லவில்லை. என் வாழ்நாளில் பொய்யொன்றைச் சொல்லித் தப்பித்துக் கொள்ள மறுத்த நான், எனக்குப் பிற்பட்ட வருங்காலத்துக்குப் பொய்யொன்றை ஏன் சொல்லிவிட்டுப்போகவேண்டும்? நாடு விடுதலைபெறும்வரை என் கல்லறைமீது எத்தகைய நினைவுச் சின்னத்தையும் பெற விரும்பாத நான், இதைச் சொல்கிறேன்.

(இந்த இடத்தில் நீதிபதி குறுக்கிட்டார்.)

## யாருக்காகச் சொல்கிறேன்

"கனம் நீதிபதியவர்களே! நான் சொல்பவை உங்கள் மனதைப் புண்படுத்தவல்ல,— உங்கள் நிலைகண்டு நான் வருந்துகிறேன், பொறுமைப்படவில்லை—நான் சொல்பவை என் தாய்நாட்டவருக்குத் தெரியவேண்டுமென்பதற்காக. இந்தச் சட்டமன்றத்தில் யாராவது ஒரு உண்மை அயர்லாந்துக்காரன் இருந்தால், அவன் கொடுமையால் தாக்கப்படும் நேரங்களில் என் நம்பிக்கை வார்த்தைகள் ஊக்கந்தருபவைகளாக இருக்கட்டும்."

(மறுபடியும் எம்மெட் குறுக்கிட்டு நிறுத்தப்பட்டான். அரசாங்கத்திற்கு விரோதமான சொற்பொழிவுகளைக் கேட்கத் தாம் அங்கு உட்கார்ந்திருக்கவில்லை யென்று நீதிபதி சொன்னார்.)

## தண்டிக்கும் முறை

"கைதுசெய்யப்பட்டவனை விசாரிக்கும் பொழுது, அவனுக்குத் தண்டனை தரும் பொழுது, ஒரு நீதிபதியின் வேலை என்னவென்பது எனக்குத் தெரிகிறது. சில சமயங்களில் நீதிபதிகள், குற்றவாளி சொல்பவைகளைப் பொறுமையுடன் கேட்டு, நீதி, நேர்மை, நியாயம், சூழ்நிலை இவைகளைப் பற்றி இதமாக விளக்கி, பின் குற்றவாளியின் மனோபாவத்தையும், நோக்கங்களையும், அவற்றின் பலன்களையும் குறிப்பிட்டு, தண்டனையைத் தருவார்கள். இவையெல்லாம் சட்டமன்றத்தின் முறைகளாகும். ஆனால் அந்த இதமான, இரக்கமுள்ள, பாரபட்சமற்ற முறைகளெல்லாம் இப்பொழுது இந்தச் சட்டமன்றத்திலிருந்து எங்கே போயின? உங்கள் சட்டத்தால்—நீதியால் அல்ல—தண்டிக்கப்பட்டு, தூக்குமேடைக்குச் செல்லவிருக்கும் ஒரு கைதி, தனது செயல்களுக்கு மூலகாரணமாக இருந்த நோக்கங்களையும் கருத்துக்களையும் வெளியிடக்கூட உரிமையில்லையா? இந்தக் கொடுமை, தூக்குமேடையும், கடுந்தண்டனையும் தருவதைவிட அதிகமானதாக இருக்கிறது.

## நீங்களும் நானும்

நீங்கள் நீதிபதி; நான் ஒரு கைதி. ஆனால் நீங்களும் ஒரு மனிதர், நானும் ஒரு மனிதன். அதிகாரத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டால், நாம் இருவரும் இருக்கும் இடங்கள் மாற்றப்படலாம் ஆனால் நாம் கொண்டுள்ள கருத்துக்கள், நம்பிக்கைகள் அவ்வளவு சுலபத்தில் மாறிவிடக் கூடியவை அல்ல. இந்தக் குற்றவாளிக்கூண்டிலிருந்து என்னைப்பற்றி நான் சொல்லமுடியாதென்றால், நீதி எங்கேயிருக்கிறது என்று கேட்கிறேன்! இது சட்டமன்றமா அல்லது நீதியின்பேரால் நடக்கும் நாடகமன்றமா? நீங்கள் எனக்குத் தரவிருக்கும்—என் உடல் மீது சுமத்தவிருக்கும், மரண தண்டனை, என் நாக்கை எப்படி அடக்கமுடியும், என் பேச்சை எப்படி நிறுத்திவிட முடியும்? கொலையாளியின் கரம் என் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். ஆனால் என் வாழ்வு இருக்கின்ற வரை, என் மதிப்புக்கும் கண்ணியத்துக்கும்

மாசு கற்பிக்கப்பட்டால், எப்படிப் பொறுத்துக்கொண்டிருப்பேன். என்னால் நேசிக்கப்பட்டவர்களுக்கும், மதிக்கப்பட்டவர்களுக்கும் நான் தந்துவிட்டுப்போகும் சொத்து, எனது பெயரும், கண்ணியமும்தான். அவற்றுக்கு இழிவுநரப்படுகிறதென்றால், வாழ்வின் கடைசி நேரத்திலும் போராடாமல் எப்படிப் பேசாமலிருப்பேன்? கூடியிருக்கும் பிரபுக்களே! சட்ட மன்ற பாதுகாவலர்களே! நாமெல்லாரும் ஒருநாள் ஒரு மாபெரும் சட்டமன்றத்தின்முன் விசாரிக்கப்படலாம்.

(கோர்ட்டாரால் எம்மெட் பேச்சுத் தடுக்கப்பட்டு, சட்டத்தின் முறையைக் கவனிக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது.)

## தேவையற்ற விசாரணை

நீதிபதியவர்களே! இறக்கவிருக்கும் மனிதன், வழக்கின்போது தன்மீது வீசப்பட்ட பழிமொழிகளுக்கும் இழிவு சொற்களுக்கும் பதிலளிக்கச் சந்தர்ப்பம் கிடையாதா? சட்ட மன்றத்தில் நான் என் இழிவாகப் பேசப்படுகிறேன்? நான் மட்டுமல்ல. நீதி இழிவாக்கப்படுகிறது. "மரண தண்டனை தருவதற்கு முன், நீ என்ன சொல்கிறாய்" என்று என்னைப் பார்த்து ஏன் முதலில் கேட்டீர்கள்? சட்டத்தின் முறை அதுவென்பீர்கள். அப்படியானால் அந்தக் கேள்விக்கு நான் பதிலளிப்பதும் அதே முறைப்படிதானே இருக்கவேண்டும். வேண்டுமானால் இவற்றையெல்லாம் தவிர்த்திருக்கலாம். விசாரணையென்று ஒன்றை நடத்தியிருக்கவேண்டியதில்லை; ஏனென்றால் எனக்குத் தரப்படவேண்டிய தண்டனை முதலிலேயே அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்டுவிட்டது, வழக்குத் தொடருமுன், ஜூரர்கள் நியமிக்கப்படுமுன்.

## சுமத்தப்பட்ட குற்றம்

பிரான்சுக்கு உதவிசெய்யும் தூதனென்று நான் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறேன்! அயர்லாந்தை பிரான்சுக்கு அடிமையாக்க நான் முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறேன்! இவற்றால் எனது நோக்கமென்ன, நான் எதிர்பார்க்கும் பலன்கள் எவை? சரியான பதில்கள் கிடைக்காது. என் தாயகத்தைப் பிற நாட்டாருக்கு விற்றுவிட முயற்சிக்கிறேனா? இருக்குமா? இல்லை. நிச்சயமாக இல்லை. விடுதலைக்குப் போராடிய வீரர்கள் வரிசையில் இடம்பெற நான் முயன்றேனேயன்றி, பதவியோ, பணமோ எனக்குப் பெரிதாகப்பட்டதில்லை. அவை என் கருத்தைக் கவர்ந்திருந்தால், என் குலத்தாலும், பிறப்பாலும், படிப்பாலும் நாட்டை அலங்கோலப்படுத்தும் கொடுங்கோலர்களுடன் சேர்ந்திருக்கமுடியும்; இந்தப் பதவியும், பெருமையும் வெகு சுலபத்தில் வந்திருக்கும். இல்லை, நீதிபதியவர்களே! பட்டம், பதவிகளுக்காக நான் பாடுபடவில்லை.

## எனது காணிக்கை

என் இதயத்தில் குடிகொண்டிருக்கும் அயர்லாந்து! அதற்காக என் உடைமை, பதவி, பெருமை எல்லாவற்றையும் காணிக்கையாகச் செலுத்தினேன், கடைசியாக, இன்று என் உயிரையே காணிக்கையாகச் செலுத்துகிறேன். வேற்றுநாட்டாரின் ஆதிக்கப்பிடியில் சிக்கி அவதிப்படும் தாயகத்தை விடுவிக்க நினைக்கும் ஒரு ஐரிஸ்காரனாகவே நான் உழைத்தேன். வெளிநாட்டு கொடுங்கோலர்கள், உள்நாட்டுத் துரோகிகள் இருவர்களையும் எதிர்த்து வெற்றிகாணவேண்டியிருக்கிறது. அடிமைத்தளைகளிலிருந்து விடுபட்டு, மற்ற சுதந்திரநாடுகளுடன் சமமாக நிற்கவல்ல அயர்லாந்து நாட்டைக் காணவே நான் பாடுபட்டேன்.

## வெளிநாட்டு உதவி

அயர்லாந்து விடுதலைபெற—என் தாயகம் தலைநிமிர்ந்து வாழ, பிறநாட்டாரின் உதவி வருமானால், அது பிரெஞ்சு நாடாயினும் சரி, வேறு நாடாயினும் சரி, வரும் உதவிகளைப் பெறவே நான் முயற்சிப்பேன். நமது விடுதலைக்கு உதவியாக வருவதற்குப்பதில், நம்மை மற்றொரு அடிமைத்தளையில் மாட்ட நினைத்தால், நிச்சயமாக நாம் அவர்களை எதிர்த்து நிற்போம். கடைசி மூச்சுவரை, கடைசி அங்குலம் நிலம்வரைப் போராடுவோம்.

ஆனால் பிரான்சிடமிருந்தும், மற்ற நாடுகளிடமிருந்தும் நாம் உதவியை எதிர்பார்க்கிறோம். ஆதிக்கக்காரர்களுக்கு எதிராகப் புரட்சி செய்தவர்கள், அடிமைத்தளையை ஒடித்தவர்கள், இவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்ப்பதில் தவறில்லை. வாஷிங்டன் எப்படி அமெரிக்காவின் விடுதலைக்குப் பாடுபட்டாரோ,

அப்படியே அயர்லாந்துக்கும் விடுதலைபெற நான் முயன்றேன். கண்ணியத்துடனும், தூய்மையுடனும் தரப்படும் உதவியைப் பெறுவதில் தவறில்லை. இந்த முறையில்தான் பிரான்சின் உதவியை நாடினேன். பிரான்ஸ் இப்பொழுது இருக்கும் எதிரியைவிட எந்த வகையிலும் மேலான நாடேயாகும்."

(இந்த இடத்தில் நீதிபதி குறுக்கிட்டார்.)

"நான் செய்த 'சதிகளின்' முக்கிய நோக்கம் இப்பொழுதுள்ள ஆட்சியை அகற்றி, என் நாட்டின் விடுதலையைக் காண்பதே என்று என்மீது குற்றஞ்சாட்டியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் சாட்டிய "குற்றம்" கண்டு பெருமைப்படுகிறேன். அப்படி என்னை ஒரு 'குற்றவாளி' ஆக்குவதால், எனக்கு உரியதைவிட அதிகமான பெருமையை அவர்கள் தருகிறார்கள். இத்தகைய 'சதித்திட்டத்தில்' எனக்கு முன்னதாக மிகப்பலர்—என்னைவிட அறிவிலும், பண்பிலும் உயர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுடன் ஒருவனாகச் சேர்த்து என்னையும் எண்ணப்படுவதற்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

## ரத்த வெள்ளத்தில்

அடிமைகளுக்கும் கொடுங்கோலர்களுக்கும் நடக்கும் இந்தப் போராட்டத்தில் சிந்தப்படும் இரத்தத்திற்கு நான் எப்படித் தூண்டுகோலாக, பொறுப்பாளியாக இருக்கமுடியும்? தூக்கு மேடையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தால் கூட, அதை மறுத்தே பேசுவேன். உங்களால் சிந்தப்படுகிற இரத்தத்தை—குற்றமற்ற, தூய இரத்தம், அவற்றையெல்லாம் ஒரு பெரும் குழியில் சேகரித்தால், நீதிபதியவர்கள் உல்லாசமாக நீந்தி விளையாடுமளவுக்குத் தேங்கிக் கிடக்கும்."

(இந்த இடத்தில் நீதிபதி குறுக்கிட்டார்.)

நான் இறந்ததும், என்னைப்பற்றித் தாழ்வாக நினைக்கவேண்டாம், தாயகத்தின் விடுதலையைத் தவிர வேறெதுவிற்காகவோ நான் முயன்றதாக எண்ணவேண்டாம், கொடுமையும், வேதனையும் மிகுந்த நாட்டில் பதவிப்பித்தர்களில் ஒருவனாக நான் கருதப்படவேண்டாம். அடக்குமுறையாளர்—கொடுங்கோலர், இவர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவராயினும் வெளிநாட்டவராயினுஞ் சரி, அவர்களை எதிர்த்தே போராடி வந்தேன். என் தாய்நாட்டின் உரிமைக்காகவும், கண்ணியத்துக்காகவும், நான் கடைசி மூச்சுவரைப் போராடியிருப்பேன். எதிரி நம்மை முறியடித்து உள்ளே நுழைவதென்றால், அது என் பிணத்தின்மீதுதான் நடைபெற்றிருக்கும். அதிகாரத்தின் மிரட்டல், கொடுங்கோலரின் கடுமை, தூக்குமேடையின் நிழல், இவைகளை அலட்சியப்படுத்தி நான் பாடுபட்டதெல்லாம், என் நாட்டுமக்கள் உரிமைபெற்று வாழவேண்டும், என் தாயகம் விடுதலைபெற்றுத் திகழவேண்டும் என்பது தான். இதற்காக என்மீது இழியும், பழியும் சுமத்திக் குற்றவாளியாக்கப்படுகிறேன். அதற்காக நான் வருத்தப்படவில்லை.

(இந்த இடத்தில் நீதிபதி இடைமறுத்து, பிறந்த குலத்தையும், தாய்தந்தையர் பெருமையையும், கல்வியறிவையும் குறிப்பிட்டு, அவைகளையெல்லாம் மாசுபடுத்தும் வண்ணம் எம்மெட் நடந்துவிட்டதாகக் குறிப்பிட்டார். அதற்கு எம்மெட் பதிலளித்தான்.)

## கடைசிப் பயணம்—கடைசி வேண்டுகோள்

இறந்தவர்கள் மீண்டும் வந்து இந்த நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்தால், நான் வருத்தப்படப்போவதில்லை. என்னருமைத் தந்தையே! உங்கள் மகன் கொண்ட கொள்கைகளையும், பட்ட வேதனைகளையும் பாருங்கள், தூய எண்ணங்களிலிருந்து, ஒழுக்கத்திலிருந்து தவறியிருக்கிறானவென்று பாருங்கள்! நல்லோர் எவர் கண்முன்னும் நான் குற்றவாளியல்லவென்றே தீர்ப்புக் கிடைக்கும்.

நீதிபதியவர்களே! ஜூரர்களே! காணிக்கையை எடுத்துக்கொள்ள மிக அவசரப்படுகிறீர்கள். சற்றுப் பொறுங்கள்! ஓரிரண்டு வார்த்தைகளில் நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

நான் குளிர்ந்த-அமைதியான கல்லறையை நோக்கிப் போகிறேன். எனது கடமையைச் செய்துவிட்டேன், ஒளி அணைகிறது, கல்லறை அழைக்கிறது, அதன் இருண்ட அகத்தில் நான் ஆழ்ந்துவிடுவேன்.

நான் விடைபெற்றுக்கொள்ளும்பொழுது கடைசியாக ஒரு வேண்டுகோள். நான் தூக்கில்

தொங்கி, கல்லறையில் தாழ்த்தப்பட்டதும் எனக்காக எந்த நினைவுச் சின்னமும் புகழ்ப் பெயர்களும் கல்லறைமீது உண்டாக்கப்பட வேண்டாம். என் காரியங்களுக்குச் சரியான மதிப்புத்தரும் காலமும், மனிதர்களும் வரும் வரை நான் காத்திருப்பேன். என் தாயகம் விடுதலைபெற்று, மற்ற தனி நாடுகளுடன் உரிமையுடன் ஒன்றாக மதிக்கப்படும் நாள் வந்தபிறகு, என் கல்லறைமீது நினைவுப்பெயர் —ஒரு இரங்கற்பாட்டு, எழுதப்படட்டும். அது வரை நான் காத்திருப்பேன்.

நான் என் கடமையை முடித்துவிட்டேன், என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

# பி. ஃபிராங்க்லினின் நேரத்தின் மதிப்பு

பெஞ்சமின் பிராங்லின் என்பவர் அமெரிக்காவில் மிகத்தேர்ந்த தொழில் நிபுணராயிருந்தவர். நீண்ட ஆராய்ச்சிகளால் புதுமைகள் பல கண்டுபிடித்தவர். நேரத்தை அவர் வீணுகக் கழிப்பதில்லை.

அவர் ஒரு பத்திரிக்கை ஆபீசும் அதற்குப் பக்கத்தில் ஒரு புத்தகக்கடையும் வைத்திருந்தார். அந்த ஊரைச்சுற்றிப் பார்க்கவந்த ஒருவர் அந்தப் புத்தகக் கடையில் நுழைந்து, புத்தகங்களையெல்லாம் புரட்டிக் கொண்டிருந்தார். ஒரு மணி நேரத்துக்குமேல் அவ்வாறு புரட்டிக்கொண்டிருந்தபின். ஒரு புத்தகத்தைத் தேர்ந்தெடுத்து கடையிலிருந்த வேலையாளை அதன் விலையைப்பற்றிக் கேட்டார்.

“ஒரு வெள்ளி” என்று பதில் வந்தது.

“ஒரு வெள்ளியா? மிக அதிகமானவிலை. அதற்குக் குறைவாகக் கிடைக்காதா?” என்று கேட்டார்.

“இல்லை. ஒரு வெள்ளிக்குக் குறையாது” என்று வேலையாள் கண்டிப்பாகக் கூறினான்.

வந்தவர் உடனே அந்தப் புத்தகத்தை வாங்காமல், மறுபடியும் ஒரு மணிநேரம் மற்றப்புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்துவிட்டு, “இந்தக் கடையின் சொந்தக்காரர் யார்?” என்று கேட்டார்.

“பிராங்லின்”

“அவரை நான் பார்க்கவேண்டும்” என்று வந்தவர் விரும்பினார்.

பிராங்லின் அப்பொழுது பத்திரிக்கை கூடத்தில் மிக வேலையாய் இருந்தார். புத்தகக்கடை பையன் அவரைப்போய் அழைத்துவந்தான்.

பிராங்லின்! இந்தப் புத்தகத்தின் குறைந்த விலை என்ன?” என்று, தான் முன் கேட்ட புத்தகத்தைக் காட்டி, சுற்றிப் பார்க்கவந்தவர் விலை கேட்டார்.

“ஒன்றேகால் வெள்ளி” என்று பிராங்லின் பதில் தந்தார்.

“ஒன்றேகால் வெள்ளியா! சற்றுமுன் உங்கள் கடைப்பையன் ஒரு வெள்ளிதான் சொன்னான்.”

“அப்பொழுது அதன் விலை ஒரு வெள்ளிதான். ஆனால் பிறகு. முக்கியமான வேலையிருந்த என்னை அழைக்கச் செய்ததால் கால் வெள்ளி விலை கூடிவிட்டது” என்று பிராங்லின் கூறினார்.

புத்தகம் வாங்கவந்தவருக்கு. பிராங்லின். சொல்வது வேடிக்கையா, அல்லவா என்று புரியவில்லை. “வேடிக்கை செய்யவேண்டாம்! இந்தப் புத்தகத்தின் மிகக் குறைவான விலை என்ன என்று சொல்லுங்கள்” என்று கேட்டுக்கொண்டார்.

“ஒன்றரை வெள்ளி”

“இதென்ன விலை வினடிக்கு வினடி மாறிக் கொண்டே போகிறது! சற்றுமுன் நீங்கள்தான் ஒன்றேகால் வெள்ளி என்று சொன்னீர்கள்” என்று புத்தகம் வாங்குபவர் ஆச்சரியப்பட்டார்.

“ஆமாம். அப்பொழுது விலை ஒன்றேகால் வெள்ளிதான். அதற்கப்புறம் நான் செலவழித்த நேரத்தைக் கணக்கிட்டால், ஒன்றரை வெள்ளியாகிறது. எனக்கு என்னுடைய நேரம்தான் பணமாகும்” என்று பிராங்லின் விளக்கினார்.

மேற்கொண்டும் நேரத்தைப் போக்கினல், விலை உயர்ந்துகொண்டே போகும் என்பதைக் கண்டு கொண்ட பொழுதுபோக்குபவர், அந்த விலைக்கு புத்தகத்தை வாங்கிக்கொண்டு பேசாமல் கடையை விட்டகன்றார்.

சிறுகதை

# கொலைகாரர்கள்

★★★

போலீஸ் குப்புசாமியைப்பற்றி அறியாதார் அந்த ஊரில் யாரும் இருந்திருக்கமுடியாது நல்ல உயரம், கனமான உடல், பெரிய பட்டை நாமம், முறுக்கிவிடப்பட்ட மீசை, தூரத்தில் நடந்துவரும் பொழுதே கண்டுகொள்ளலாம். அதிலும் உத்தியோக உடையில் நின்று, மூக்குக்கண்ணாடியைத் தளர்த்திக்கொண்டு, விழி உருட்டி, உரத்த குரலில் அதட்டும்பொழுது யாருக்கும் பயம் வரத்தான் செய்யும். போலீஸ் குப்புசாமி என்றால் ஊரில் சுற்றித் திரியும் பழக்கமான குற்றவாளிகளுக்குக்கூடச் சற்று தயக்கம்தான் உண்டாகும். பிடிவாதத்துடன் தனது வேலையைச் செய்வதில் குப்புசாமி கண்ணும் கருத்துமாயிருந்தான். அவனுடைய ஊக்கத்தையும், வேலைத் திறமையையும் கண்டு, அவனுக்கு ஹெட்கான்ஸ்டேபிள் உத்தியோகமும் கிடைத்தது.

அந்தச் சமயத்தில், குப்புசாமி வேலை பார்த்துவந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு உட்பட்டிருந்த வட்டத்தில் குற்றங்கள் அதிகரித்த வண்ணமிருந்தன. முதல் வருஷம் இருந்ததைவிட, பதிவு செய்யப்பட்ட குற்றங்கள் தொகை வளர்ந்துகொண்டே போனது. திருட்டுச் சாராயம் காய்ச்சுதல், பட்டப்பகலில் கொள்ளை, கடைத்தெருவில் ஜேப்படி, மந்திரத் தகடு தயாரித்துக்கொண்டிருந்தவன் ஓடிப்போனது, அம்மன்கோயில் நகைகளுடன் குருக்கள் மாயமாய்மறைந்தது இப்படி விதவிதமான குற்றங்கள், சில்லறைத் தகராறிலிருந்து பெருத்த அளவுவரை, போலீசுக்குத் தெரிவிக்கப்பட்டுவந்தன. இந்தக் குற்றங்களுக்கெல்லாம், தனிப்பட்டக் காரணங்களைத் தவிர்த்துப் பொதுவாக, கலி முற்றியதிலிருந்து காஷ்மீரம்-கொரியா சண்டைகள்வரைக் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. போதாதென்று, ஜெயிலில் இருந்த குற்றவாளிகளில் பலரைத் தண்டனைகாலத்துக்கு முன்பே வெளியில் அனுப்பிவிட்டதும், இந்தக் குற்றங்களின் எண்ணிக்கை உயர்வுக்குக் காரணமாயிருக்கலாமென்று சொன்னார்கள். காரணங்கள் எவையிருந்தபோதிலும், போலீசுக்கு அதிக வேலையிருந்தது. அதிலும் குப்புசாமிக்கு அப்பொழுதுதான் வேலை உயர்ந்த சமயமாதலால் முன்னைவிட அதிக ஊக்கத்துடன் தனது வேலைகளைக் கவனித்துவந்தான்.

ஒருநாள் மாலை, இருட்டுகிற வேளை. குப்புசாமி சாதாரண உடையில் ஊரைச் சுற்றிவந்துகொண்டிருந்தான். சந்தைக் கடைக்குப் பக்கத்திலிருக்கும் தோப்பில் இரண்டுபேர் பேசிக்கொள்வது குப்புசாமியின் காதில் விழுந்தது. ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து நின்று, குப்புசாமி அவர்கள் பேசுவதைக் கேட்டான்.

முதல் ஆசாமி, "என் இவ்வளவு நாழி?" என்று இரண்டாவது பேர்வழியைப் பார்த்து அதட்டினான். அவனுடைய குரலிலிருந்து அவன் ஒரு முரடன் என்பது தெரிந்தது.

இரண்டாவது பேர்வழி அப்பொழுதுதான் வந்து சேர்ந்திருக்க வேண்டும். "நானென்ன செய்வது, யாருக்கும் தெரியாமல் வரவேண்டியிருக்கிறது நாம் செய்கிற காரியம் இப்பொழுது ஒருவருக்கும் தெரியக்கூடாது பார்?"

குப்புசாமி காதைத் தீட்டிக்கொண்டு கேட்டான். ஆனால் காற்று பலமாக அடித்து, அவர்கள் பேசிக்கொண்டிருந்தது சரியாகக் காதில் விழவில்லை. காற்று அடங்கியதும், மறுபடியும் அவர்களுடைய பேச்சுக்கள் நன்றாகக் கேட்டன.

முரட்டுமனிதன் : "நீ கொஞ்சங்கூடப் பயப்படக்கூடாது. அதிலும் கொலை செய்கிற நேரத்தில், மிக்கத் திறமையாக இருக்கவேண்டும். சிறிதும் தவறு வரக்கூடாது.

இரண்டாவது ஆள்: "அதெல்லாம் சரியாகச்

செய்துவிடுவேன். இதற்குமுன் இதைச் செய்ததில்லை, என்றாலும், இரண்டு மூன்று தடவைச் செய்துவிட்டால் அப்புறம் கொஞ்சங்கூட கூச்சமென்பதே இருக்காது.”

முரட்டு மனிதன்: “முதல் தடவை செய்யும்பொழுதே நான் கஷ்டமில்லாமல் செய்தேன். இதோபார்! நீ உன் சகாக்களுடன் ஒளிந்துகொண்டிருக்கிறாய்! உன் எதிரி தள்ளாடிக்கொண்டு வருவான். நீ அவன்மீது பாய்ந்து கத்தியால் ஒரே குத்து விடு! அவன் சாய்ந்துவிடுவான்.”

குப்புசாமியின் மயிர் சிலிர்த்தது. ஏதோ ஒரு கோரக் கொலைக்குச் சதித்திட்டம் ஆரம்பமாகிறது என்பதைக் கண்டுபிடித்தான். உடனே, அந்த இடத்திலேயே இருவரையும் பிடித்துக்கொண்டுபோய் அடைத்துவிடலாமென்று தோன்றியது. மெதுவாக எட்டிவந்து, உலவிவருவதுபோல் அந்த இருவர்களையும் குப்புசாமி சுற்றிவந்தான்.

முதலில் பேசின முரட்டு ஆள் கசாப்புக் கடையில் வேலைபார்க்கும் கண்ணுசாமி. மற்றொருவன் மளிகைக்கடையில் இருந்த மாணிக்கம். இவர்கள் இருவரும் இவ்வளவு தூரம் கொலைக்கான திட்டங்கள் போடுவார்களென்று குப்புசாமி எதிர்பார்க்கவில்லை. கண்ணுசாமி பார்ப்பதற்கு முரடனாயிருந்தபோதிலும், இதற்குமுன் எந்தவகையிலும் அவன்மீது போலீசுக்கு புகார் வந்ததில்லை. மாணிக்கம் பலமான காற்றடித்தாலே ஒடிந்துவிழுபவன்போல இருப்பான், கடைத்தெருவில் அவன் இருக்கிற இடமே தெரியாது. இவர்கள் இரண்டுபேரும் சேர்ந்து யாரைத் தீர்த்துவிடத்திட்டம்போடுகிறார்கள் என்பது தெரியவில்லை.

தங்களுக்குள்ளாகப் பேசிக்கொண்டிருந்தவர்கள், தோப்பைவிட்டு வெளியே வந்தார்கள். குப்புசாமியும் அவர்கள் பின்னால் மெதுவாக வந்தான். சந்தைக்கடை வந்ததும், கண்ணுசாமி, “சரி! மாணிக்கம் நீ போய்விட்டு, சனிக்கிழமை சாயந்திரம் வந்துவிடு! எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளலாம்” என்றான்.

எந்த இடத்தில்? அப்படிக்கேட்கவேண்டுமென்று குப்புசாமிக்குத் தோன்றியது. அதற்கு மாணிக்கம் பதில் தருவதுபோல் சொன்னான், “எங்கே? அந்த மாந்தோப்புக் கட்டிடத்துக்குத்தானே!” என்றான். ஆமாமென்பதுபோல் தலையைசைத்துக்கொண்டு கண்ணுசாமி பிரிந்துபோய்விட்டான்.

மாந்தோப்புக் கட்டிடமென்பது ஊருக்கு வெளியில் இருக்கும் ஒரு பாழடைந்த கட்டிடமாகும். பத்து வருஷத்துக்குமுன் அங்கு ஒரு கொலை நடந்தது. அதற்கப்புறம் அங்கு யாரும் குடியிருப்பதில்லை. சந்தடியற்றுக்கிடக்கும் அந்த இடத்தை இந்தச் சதிகாரர்கள் உபயோகிக்கப்போகிறார்கள் என்பது குப்புசாமிக்குத் தெரியவந்தது. மேலும் அவர்கள் சந்திப்பதாகச் சொன்னது சனிக்கிழமை, இன்னும் மூன்று நாட்களிருந்தன. அதற்குள் இந்தச் சதித்திட்டம் பூராவையும் கண்டுபிடித்துவிடலாமென்ற நம்பிக்கை குப்புசாமிக்கு உண்டானது.

மறுநாள் காலையில் கண்ணுசாமி, மாணிக்கம் இவர்களுடைய நடவடிக்கைகள் இரகசியமாகக் கண்காணிக்கப்பட்டன. மளிகைக்கடைக்குப் போய் சாமான் வாங்குவதுபோல், மாணிக்கத்துடன் குப்புசாமி பேச்சுக்கொடுத்தான். மெதுவாக, எந்த ஊர், என்ன கம்பளம் என்பதிலிருந்து ஆரம்பித்து, அவனுக்கு யாரார்மீது பகையிருக்கிறதென்று கண்டுபிடிக்க முயன்றான். ஆனால் அந்த அப்பாவி மாணிக்கத்தின் எதிரிகளோ, காற்று, மழை, ரேஷன் அரிசி, பொத்தல் குடை, தலைவலி, பஞ்சம், பட்டினி இவைகளாயிருந்தன. குறிப்பிட்ட தனிநபர் யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

மளிகைக் கடையிலிருந்து புறப்பட்டு, குப்புசாமி கசாப்புக்கடைக்குப் போனான். அப்பொழுது கசாப்புக்கடையில் கூட்டம் அதிகமில்லை. கண்ணுசாமி டெய்லர் அருணகிரியுடன் பேசிக்கொண்டிருந்தான். கடையில் இருக்கும் ஆட்டுக்கறியைப் பார்வையிடுவதுபோல், அவர்கள் பேசுவதை குப்புசாமி கூர்ந்து கேட்டான். குப்புசாமியைப் பார்த்ததும், இருவரும் பேச்சை நிறுத்திக்கொண்டார்கள். இருந்தபோதிலும், “எதற்கும், உன் கத்திரிக்கோலை எடுத்துக்கொண்டு மாந்தோப்பு பங்களாவுக்கு மறந்துவிடாமல் வந்துவிடு” என்று கொஞ்சதூரம்போய், கண்ணுசாமி அருணகிரியிடம் சொன்னது, குப்புசாமியின் எலிக்காதில் விழாமற்போகவில்லை.

அருணகிரியின் கடைப் பக்கம் போகும் பொழுது, அங்கு என்ன நடக்கிறது என்பதை குப்புசாமி கவனித்தான். அங்கு குறிப்பிடத்தக்க எதுவும் காணப்படவில்லை. இந்தச் சதித் திட்டத்தில், அருணகிரி எவ்வளவுதூரம் ஈடுபட்டிருக்கிறானென்று புரியவில்லை. அருணகிரி சாப்பிடப்போன சமயத்தில், குப்புசாமி அந்தத் தையற்கடைக்குப் போய், கிழிந்த துணிபொன்றைத் தைக்கவேண்டுமென்று சொன்னான். கடையில் உதவியாக இருக்கும் சிறு பையன், அந்தத் துணியைத் தைப்பதின் மூலம் தன் திறமையை அதிகப்படுத்திக் கொள்ளும் ஆர்வத்திலிருந்த சமயத்தில், கடைக்குள்ளிருந்த சாமான்களை ஒவ்வொன்றாக குப்புசாமியால் சோதனைபோட முடிந்தது. பார்த்துக்கொண்டு வருகையில், கடைசியில் ஒரு மேஜைக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருந்த சிறு கட்டைப் பிரித்தால், அதில் திருடர்கள் அணிந்துகொள்ளும் கருப்பு முகமூடிகள் நான்கு இருந்தன! இப்பொழுது எடுத்துப் போனால், காரியம் கெட்டுவிடுமென்று குப்புசாமி அவற்றைப் பழையபடி வைத்துவிட்டு, தைத்த துணியை வாங்கிக்கொண்டு போய் விட்டான்.

அன்று மாலை, கசாப்புக் கடைக்காரன் கண்ணுசாமி இரண்டு பெரிய கத்திகளை எடுத்துச் சாணை பிடித்துக் கொண்டிருந்தான் என்ற செய்தியும் தெரிய வந்தது. உடனே குப்புசாமி அந்த சாணை பிடிப்பவனிடம் கத்தியின் அளவு, கூர்மை, பலம் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டான்.

அதற்கு மறுநாளும் துப்பு அறிவது தொடர்ந்து நடத்தப்பட்டது. அன்றைய விசாரணையில் மற்றும் இரண்டு முக்கிய விஷயங்கள் தெரியவந்தன. இரும்புக் கடையில் வேலை பார்க்கும் இருளப்பன், மொத்தமான இரும்புக் கம்பிகள் நான்கைக் கொண்டு வந்து கண்ணுசாமிக்குக் கொடுத்திருக்கிறான் என்று தெரியவந்தது. அத்துடன் முக்தா ஸ்டோர்ஸில் வேலை பார்த்த ரத்னம் என்பவன் கண்ணுசாமி, மாணிக்கம் இவர்களுடன் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. குப்புசாமியும் போலீசும் இவர்களின் நடமாட்டங்களையெல்லாம் மிகத் தீவிரமாகக் கண்காணித்தனர்.

கடைசியாக சனிக்கிழமை வந்தது. சதித் திட்டத்தில் யாரார் இருக்கிறார்கள் என்று ஓரளவுக்கு ஊகிக்க முடிந்தது. அவர்களால், கத்தி, கருப்பு முகமூடி, இரும்புக் கம்பிகள், கத்தரிக்கோல், இவைகள் சேகரிக்கப்படுகின்றன என்பதும் தெரிய வந்தன. அன்று காலையிலிருந்தே கண்ணுசாமி முதலானவர்கள் மிக்கப் பரபரப்புடன் இருந்தார்கள். மற்றவர்கள் கவனிக்காத விதத்தில் மூட்டையாகவும் கட்டுக்கட்டியும் சில சாமான்கள் மாந்தோப்பில் பாழடைந்து கிடக்கும் மாளிகைக்குக் கொண்டுபோய் சேர்க்கப்பட்டன. முதலில் எதிர்பார்த்ததைவிட, அதிகமான ஆட்கள் இந்தச் சதித் திட்டத்தில் இருக்கின்றார்கள் என்பது தெரியவந்ததால், பாழடைந்த மாளிகையைச் சுற்றிச் சரியான காவல்வைக்கப்பட்டது.

அன்று மாலை 6 மணிக்கு கண்ணுசாமியும், மாணிக்கமும் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்கள். பின் ஒவ்வொருவராக, இருளப்பன், அருணகிரி, ஏகாம்பரம் முதலானவர்கள் வந்தார்கள். எல்லோரும் மெதுவாக, ஆனால் பரபரப்புடன் மாளிகையை நோக்கி வந்து, ஏதோ ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்கப் போகிறவர்கள் போல ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு, "எல்லாம் தயாரா?" என்று கேட்டுக் கொண்டார்கள். கடைசியாக முக்தா ஸ்டோர்ஸ் ரத்னம் வந்த பொழுது, கண்ணுசாமி முன் வந்து "ரத்னம்! கொண்டு வந்தாயா அதை!" என்ற கேட்டான். "அதனால்தான் தாமதம்" என்ற கூறி ரத்னம் தன் சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு கைத்துப்பாக்கியை எடுத்துக் கொடுத்தான்.

"ஆகா! ரொம்ப நல்லதாய் போச்சு! நீயே வைத்துக்கொள்! எப்படியும் இந்த ஏழு கொலையை இன்றைக்கு முடித்து விடலாம்!" என்று கண்ணுசாமி கூறினான்.

ஏழு கொலை! செடி மறைவில் உட்கார்ந்திருந்த குப்புசாமி தலையசைத்துக் கொண்டான்.

எல்லோரும் பாழுங் கட்டிடத்துக்குள் போய் விட்டார்கள். கண்ணுசாமி மட்டும் வெளியில் காத்துக் கொண்டிருந்தான். கடைசியாக சிட்டியடித்துக்கொண்டு மூர்த்தி வந்தான்! மூர்த்தியை பார்த்ததுதான் குப்புசாமிக்கு இந்தச் சதிக்காரர்கள் யார் மீது கண் வைத்திருக்கிறார்களென்று தெரிந்தது.

மூர்த்தி அந்த ஊரில் இருக்கும் பணக்கார குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய அப்பா அருணாசலம் என்றால் "ஐயோ!" என்று ஊரிலுள்ளவர்கள் பயப்படுவார்கள். மூர்த்தி பணக்கார வீட்டுப் பிள்ளையாதலால், செல்லத்துடனும், செருக்குடனும் வளர்க்கப்பட்டவன். வயது வந்ததும், ஊர் சுற்றி, சோம்பேறியாகவேக் காலங் கடத்தி வந்தான். சில்க் சட்டை, கையில் வைரச் செயின், கழுத்தில் ஒரு தங்கச் சங்கிலி இவைகளே அவன் பெரிய வீட்டுப் பையன் என்பதை எடுத்துக் காட்டின. அந்த இருட்டுகிற நேரத்தில் மாந்தோப்பு மாளிகையை நோக்கி அவன் வரும்பொழுது கூட, சிட்டி யடித்துக்கொண்டு உல்லாசமாக வந்தான்.

அவனைக் கண்டதும், கண்ணுசாமி அவனை வரவேற்று பேசியபின், மிக மரியாதையுடன், உள்ளே அழைத்துச்சென்றான். போலீஸ் அதிகாரியும் குப்புசாமியும், மற்ற போலீஸ்காரர்களும், கதவோரத்திலும், மறுபக்கத்திலும் போய் நின்று கொண்டு, உள்ளே நடப்பதைப் பார்த்தார்கள்.

ஒரு வாசற்படியைக்கடந்து மூர்த்தி உள்ளே வந்தான். உடனே மாணிக்கம்—கருப்பு புக மூடியுடன், கையில் கத்தியுடன் துள்ளிக் குதித்து மூர்த்தியின் முன் நின்றான். "அடபாவி! எங்கே போகிறாய்?" என்று கர்ஜித்தான்.

மூர்த்தி திடுக்கிட்டுப்போய், "ஆ, நீயா! என்னை விட்டுவிடு! என் அப்பாவிடம் சொல்லி உனக்கு எவ்வளவு வேண்டுமானாலும் காசு தரச் சொல்லுகிறேன்" என்று மண்டியிட்டுக் கெஞ்சினான்.

மாணிக்கத்தின் கோபம் அதிகரித்தது. "ஆ!" என்று இடிபோலச் சிரித்து, "என்ன சென்னாய் காசு தருகிறாயா? காசு எனக்கு என்னத்திற்கு? உன்னுடைய உயிர்தான் வேண்டும்! உயிர்தான் வேண்டும்! இதோ இந்த கத்திக்கு நீ பதில் சொல், துர்க்தனே!" என்று கத்தியால் ஓங்கி மூர்த்தியைக் குத்தப் போனான். உயர்ந்த கை தாழுமுன் போலீஸ்காரர்கள் உள்ளே புகுந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு மற்றவர்களையும் சூழ்ந்து கொண்டு ஒன்றும் செய்ய விடாமல் தடுத்து விட்டனர்.

"இப்பொழுது எப்படி போலீஸ் வந்தது?" என்று மாணிக்கம் திகைத்தான்.

"கொலை நடந்த பிறகல்லவா வந்திருக்க வேண்டும்" என்று கண்ணுசாமி கையைப் பிசைந்து கொண்டு, "நீங்கள் போய் மறுபடியும் வாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

"உங்களையெல்லாம் கைது செய்திருக்கிறோம்" என்று போலீஸ் அதிகாரியின் உத்தரவு வந்தது. பின்னால் நின்று கொண்டிருந்த குப்புசாமி மீசையைத் தடவிக்கொண்டு முன் வந்தான். "உங்கள் சதித்திட்டங்கள் விளங்கி விட்டன. ஏழு கொலையா செய்யப் போகிறீர்கள்? அந்த ஏழு பெயர்கள் யாரார்? சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"ஐயோ! உண்மையான போலீஸ்" என்று ஆச்சரியமும் பயமும் கலந்த குரலில் கண்ணுசாமி கூச்சலிட்டு, பக்கத்திலிருந்த ஒரு பலகையை எடுத்து போலீஸ் அதிகாரியிடம் கொடுத்தான். அதில்,

**புதிய நாடகம்**

## மாய மந்திரம்

அல்லது

## ஏழு கொலைகள்

மூர்த்தி, கண்ணுசாமி, மாணிக்கம்,
ரத்னம், அருணகிரி, ஏசாம்பரம், இருளப்
பன், நடிப்பார்கள்,

டைரக்ஷன் : மூர்த்தி
கதை : மாணிக்கம்
மேற்பார்வை: கண்ணுசாமி

என்று இருந்தது.

போலீஸ் அதிகாரி சிரித்துக்கொண்டு "நாடகமா! இது முதலிலேயே தெரியாமல் போயிற்றே! மூர்த்தி! உனக்குத்தான் ஏதோ ஆபத்து என்று நினைத்துவிட்டோம். இந்த நாடகத்துக்கு நீங்கள் கத்தி, கம்பு, அரிவாள், கைத்துப்பாக்கி எல்லாம் சேகரித்ததும், ஏதோ சதித்திட்டம் உருவாகிறதாக குப்புசாமி

தப்பிவிட்டான். இவ்வளவு ஆயுதங்களெதற்கு?" என்று கேட்டார்.

மூர்த்தி முன்வந்து "என்ன சார்! இந்த சாமான்களே போதாது போலிருக்கிறது. மொத்தம் ஏழு கொலைகள் நடக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக செய்யணும். இன்னும் இரண்டுமுறை வேண்டியிருக்கின்றன. அதற்கு என்னசெய்யலாம் சார்?" என்று யோசனைகேட்க ஆரம்பித்தான்.

"ஒரு நாடகத்தில் ஏழு கொலையா?"

"ஆமாம்! ஏழு டிராஜடிஸ்! ஒவ்வொன்றும் திடுக்கிடக்கூடியது!" என்று டைரக்டர் மூர்த்தி சொன்னான்.

"நாடகமாடினாலும், கொஞ்சம் நல்ல நாடகமா, சந்தோஷ முடிவோடு இருக்கிறதா எழுதப்படாதோ!" என்று போலீஸ் அதிகாரி கேட்டார்.

கதையெழுதின மாணிக்கம்தான் அதற்குப் பதில் சொன்னான். "நான் என்ன செய்வது. காதல்கதையென்றால் என் முதலாளி கோபித்து, வேலையைவிட்டுப் போகச்சொல்லி விடுவார். புராணக்கதையென்றால் கூட்டம் வராது. சரித்திரக்கதையென்றால் செலவு செய்ய பணம் எங்களிடமில்லை. இதையெல்லாம் பார்த்துவிட்டுதான் கடைசியாக இதற்கு வந்தோம். கொலைகாரன் கதை என்றால் தொல்லை எதுவும் இருக்காது."

போலீஸ் அதிகாரியும், மற்றவர்களும், அந்த "ஏழு கொலைகாரர்களையும்," "கொலைபடப் போகிறவர்களையும்" விட்டு வெளியேறினார்கள்.



# நட்சத்திரம்

★

நட்சத்திரம் என்பது தூய தமிழ்ச் சொல்லேயாகும். இது முதலில் நக்கத்திரம் என்று இருந்தது. அந்தச் சொல்லைப் பிரித்தால், நகு—அர்—திரம் என ஆகும். நகு என்றால் மிகுதியான என்றும், திரம் என்றால் ஒளி என்றும் பொருள். எனவே நக்கத்திரம் என்றால் மிகுதியான ஒளியுடையது என்று பொருள். வானில் மிகுதியாக ஒளிவிட்டு விளங்குகின்ற காரணத்தால், நக்கத்திரம் அப்பெயர் பெற்றது. நாளடைவில் இது திரிந்து, நட்சத்திரம் என ஆயிற்று.

புறநானூறு 229-ம் பாட்டிற்கு எழுதப்பட்ட உரையில், மிருகசீரிடம் என்ற நட்சத்திரத்தைக் குறிப்பிடும்பொழுது "மிருகசீரிடமாகிய நக்கத்திரம்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டைய இலக்கியங்களில், நட்சத்திரம் பெரும்பாலும் விண்மீன் என வழங்கப்பட்டது. மீன் என்ற பெயர் மின்னுவது என்பதால் வந்ததாகும். விண்ணில் மின்னுகிற காரணத்தால் அது விண்மீன் எனப்பட்டது. இதேவகையால், நீரில் மின்னுகிற மீனும், மேகங்களிடை மின்னுகிற மின்னலும், மின்னுவது குறித்து அந்தந்தப் பெயர்கள் பெற்றன.

இலக்கியம்

# வெற்றியின் பரிசு

போர் முடிந்தது, வெற்றிகண்ட வீரர்படை தலைநகரை நோக்கித் திரும்பி வந்துகொண்டிருந்தது.

"வெற்றி தந்த படை வருகிறது" என்ற செய்தி நாட்டுமக்களைத் தலைநகரின் நீண்ட தெருக்களில் கொண்டுவந்து சேர்த்தது. வாகை சூடிய படையை, தாயகத்தின் மானங்காத்த மறவர்களை வரவேற்க நகர வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வாசமாலைகளும், தோரணவாயல்களும் வழியெங்கும் நிறைந்திருந்தன. மாடங்களில் மகளிர் கூட்டம் நின்றது, வெற்றிப்படைமீது மலர்மாரி தூவ. கூடங்களில் குழுமியிருந்தனர் புலவரும், பெரியோரும், வரும் வீரர்தம் வெற்றிப்பரணிபாட. சோலைப் பக்கத்திலும், சாலையோரத்திலும் காத்திருந்தனர், காதலர்களை எதிர்நோக்கியிருக்கும் காதலியர், மகனைக் காணத் துடிக்கும் தாய், தந்தையுடன் விளையாட நிற்கும் சிறுவன்.

படையினர் அடைந்துள்ள வெற்றி மகத்தானது, அவர்கள் காட்டிய தீரத்தை, அதிலும் படைத்தலைவன் ஏனாதி திருக்கிள்ளி களத்திலே காட்டிய வீரத்தைப் பற்றிப் பேசாதார் யாருமில்லை. அந்தத் தமிழ்ப்பகுதியை—இயற்கையழகும், செயற்கை வளனும் இயைந்து காணப்பட்ட திருநாட்டைக் கைப்பற்ற எண்ணிய மாற்றாரின் பெரும்படையை, ஏனாதி திருக்கிள்ளியின் படை எதிர்த்து நின்று சிதறடித்திருக்கிறது.

"இந்தச் சிறுபடையால் என்னசெய்யமுடியும்" என்று இறுமாப்புடன் கொக்கரித்த எதிரிப் படைகள், ஏனாதி திருக்கிள்ளியின் படைமுன் தங்களைக் காத்துக்கொள்ளும் ஆற்றலின்றி, தப்பினால் போதுமென ஓடிவிட்டனர். அத்தகைய பெருவெற்றி கண்ட வீரர்கள், தாயகத்தின் மானங்காத்த மறவர்கள், வாகை சூடியபடை, அதற்கு வழிவகுத்த மாவீரர் வருகிறார்கள் என்று எல்லோரும் காத்திருந்தனர்.

கடைசியாக முரசு முழங்கியது. "அதோ! வீரர்கள்!" என ஆரவாரத்துடன் கூடியிருந்த மக்கள் கூவினர்.

வெற்றி முரசு ஒலிக்க, பெற்ற விருதுகள் சிறக்க, கைப்பற்றிய கலங்கள் வர, படைவரிசை அருகே வந்தது. மக்கள் பேரொலி எழுப்பி ஆரவாரித்தனர்.

வீரர்கள் வந்தனர்.

வீரர்களை அருகிலே கண்டதும், அவர்களை வரவேற்கக் காத்திருந்த மக்கள் சிறிது கலக்கமடைந்தனர், மகிழ்ச்சி ததும்பிநின்ற முகங்களில் சிறிது மலைப்புத்தட்டியது.

வீரர்கள் வெற்றியடைந்துள்ளனர். ஆனால் அந்த வெற்றியை அடைய, அவர்கள் கொடுத்துள்ள விலையின் அளவு இப்பொழுதுதான் தெரிந்தது.

கண்ணிழந்தோர், கைகால் குறைந்தோர், மார்பிலும், தோளிலும் படுகாயங்கள் ஏற்றோர் ஏராளமாக இருந்தனர்.

போகும்பொழுது அரும்பு மீசையினனாய், அழகு கரும் முகத்தினனாய் அவன் இருந்தான், இப்பொழுது முகத்தில் வாள் பட்டு பார்க்கக் கோர உருவடைந்திருந்தது.

குழந்தை ஓடிவந்து இழுத்தது. அதன்பின் செல்லக்கூடாமல், ஒரு வீரன் நொண்டிக்கொண்டு சென்றான்.

ஓடிவந்து தாவிய காதலியை, இரு கையாலும், அணைத்துக்கொள்ளமுடியாமல், ஒரு கையால் மட்டும்தான் ஒரு வீரனால் அணைத்துக்கொள்ள முடிந்தது.

"அப்பா! மகனே!!" என்று தாயொருத்தி ஆவலுடன் வந்தாள். "எங்கேயம்மா இருக்கிறாய்?" என்று தடுமாறினான் குருடனான ஒரு வீரன்.

வெற்றி கண்டனர். ஆனால் சிலர் குருடாகத் திரும்பினர்.

வாகை சூடினர், சிலர் கரம் ஒடிந்து வந்தனர்.

வெற்றிக்கு வழிவகுத்தனர், ஆனால் அவர்களில் சிலரால் நன்றாக நடந்துசெல்லவும் முடியவில்லை.

கடைசியாகப் படைத்தலைவன் ஏனாதி திருக்கிள்ளி வந்தான். மாவீரன், மறவர்குலக் கோமான், எதிர்த்துவந்த பெரும்படையினுள் புயலெனப் புகுந்து, மாற்றார் படையினைச் சருகெனச் சிதறடித்தவன்—அந்தப் பெரும் புகழ்த் தலைவன் திருக்கிள்ளி வந்தான்.

வெற்றிகண்ட படைத்தலைவனாயிருக்கலாம், வீரஞ்செறிந்த மறவனாயிருக்கலாம், ஆனால் புண்பட்ட மேனியுடன் நேரில் பார்க்க அலங்கோலமாயிருந்தான்.

படைவீரர்களை வரவேற்கக் கூடியிருந்தவர்களில் மாடலன் மதுரைக்குமரன் என்ற ஒரு புலவர் இருந்தார். அவர் சோனாட்டைச் சேர்ந்த எரிச்சலூர் என்ற ஊரைச்சேர்ந்தவர். எனவே நாட்டையும் ஊரையும் குறிப்பிட்டு, சோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்றும் அவர் பலரால் அழைக்கப் பட்டார். வீரர்களையும், படைத்தலைவனையும் பார்த்ததும் புலவருக்குச் சிரிப்பு வந்தது.

தம்மைப் பார்த்துப் புலவர் நகையாடியது கண்ட ஏனாதி திருக்கிள்ளி, அவரை அருகே அழைத்துக் காரணம் கேட்டான். அவனையும், அவனுடைய வீரரையும் எவரும் எள்ளி நகையாடத் துணியார். இறுமாப்பால், நகையாடிய எதிரிகளே களத்தில் வந்ததும் அதன் மதிப்பு என்னவென்று உணர்ந்துவிட்டனர். ஆனால் அவர்கள் எதிரிகள்; இவரோ, அருந்தமிழ்ப் புலவர். வேடிக்கை ஏதோ கண்டுதான் அவ்வாறு நகைத்திருக்க வேண்டுமென்று ஏனாதி திருக்கிள்ளி நினைத்து, புலவரை அமைதியுடன் வினவினான், நகைத்தற்குக் காரணமென்னவென்று.

"உன்னையும், உன் வீரரையும் பற்றி, ஒரு வகையில் நான் ஏமாற்றமடைந்தேன்" என்று புலவர் பதிலளித்தார்.

"ஏமாற்றமா? ஏன் புலவரே! சென்ற தொழிலைச் சிறப்புடன் முடிக்கவில்லையா? தொடுத்த போரில் வெற்றி காணவில்லையா? எடுத்த வாள், மடுத்த ஈட்டி, தடுத்த களிறு, அடுத்த பகைக்குலம் எல்லாவற்றையும் விலக்கி, எதிர் நின்று, வெற்றியை இழுத்துவரவில்லையா? இதில் எங்கே வீரம் குறைந்தது. நீங்கள் ஏமாற்றமடைய? இறுமாப்புடன் சின்மொழி பேசிய எதிரிகள் ஏமாற்றமடைந்தனர், 'இவர்களால் என்ன செய்யமுடியும்' என எள்ளி நகைத்த மாற்றார் ஏமாற்றமடைந்தனர், நம் வீரம்கண்டு, நீங்கள் ஏன் ஏமாற்றமடைந்தீர், புலவரே?" என்று ஏனாதி திருக்கிள்ளி கேட்டான்.

"தலைவனே! நீ எவ்வளவுதான் சொன்னாலும் என் ஏமாற்றம் இன்னும் குறையவில்லை. தோற்றுப்போய் ஓடினார்களே உன் எதிரிப் படைகள்; அவர்களைப் பார்க்கும்பொழுது ஏற்பட்ட மகிழ்ச்சிகூட உன்னைப் பார்க்கும் பொழுது ஏற்படாது போலிருக்கிறது!" என்றார் புலவர்.

"சற்று விளங்கச் சொல்லுங்கள், புலவரே! களத்திலே நான் பெற்ற அளவு பயிற்சி, ஏட்டிலே நான் பெறவில்லை. அதிலும் உங்களுடன் வாதிடுமளவுக்கு. அருந்தமிழ்ப் புலவரே! எங்கள் மாற்றாரிடம் காணப்படாத குறைகள் எங்களிடம் எவை காணப்படுகின்றன என்று சொல்லுங்கள். நும் மொழிகேட்டுத் திருந்தி விடுவோம்" என்று படைத்தலைவன் சொன்னான்.

"வீரர் தலைவனே! நீதான் போரைக் காணின், அந்தப்போரை வென்று, பகைவரது படைவரிசையை விலக்கி, எதிர்த்து நிற்பதால் வாள் வீச்சுகளால் உண்டாகும் வடுக்கள் நிரம்பிய உடலைப் பெற்றிருக்கிறாய்! புகழ்வோரால் கேட்பதற்கு நீ இனிமை தந்தாலும், நேரில் பார்ப்போரின் கண்களுக்கு நீ இனிமைதருவதில்லை. உன்னுடைய பகைவர்களோ! உன்னைக் களத்தில் கண்டதும் புறங்கொடுத்து உடனே ஓடுகிறவர்களாதலால், வடுக்கள் எதுவுமின்றிப் பாதுகாக்கப்பட்ட உடலை உடையவர்களாய், கண்ணுக்கு இனியராக இருக்கிறார்கள், ஆனால் கேட்கும் செவிக்கு இனிமை தருவதில்லை. ஆதலால் நீ ஒருவிதத்தில் இனிமை பயந்தால், அவர்கள் மற்றொரு விதத்தில் இனிமை தருகிறார்கள். மற்ற வகைகளில் வேறுபாடுகள் பல இருக்கின்றனவா? வெல்லும் போரினைச்செய்யும் வீரக்கழலணிந்த அடியினையும், மிக விரைவாகச் செல்லும்

குதிரையுமுடைய கிள்ளியே! உலகம் உன்னைத் தான் மதிக்கிறது. அதற்குக் காரணம் யாதோ? எனக்குச் சொல்க!" எனப் புலவர் கூறினார்.

முதலில் பழிப்பதுபோலப் புலவர் சொற்கள் இருந்தபோதிலும், பின்பு அது உண்மையில் புகழுரையாக இருப்பது தெரிந்தது.

எனாதி திருக்கிள்ளியைப் பற்றி, இவ்வாறு பழிப்பதுபோலப் புகழ்ந்து, கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார் கூறியது, புறநானூறு 167-ம் பாட்டில் உள்ளது.

"நீயே, அமர்காணின் அமர்கடந்தவர்
படைவிலக்கி யெதிர்நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை கட்கின் னாயே
அவரே, நிற்காணிற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கையொடு
கண்ணுக் கினியர் செவிக்கின் னாரே
அதனால், நீயுமொன் றினியை அவருமொன் றினியர்
ஒவ்வா யாவுள மற்றே வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி
நின்னை வியக்குமிவ் வுலகமஃது
என்னோ பெரும வுரைத்திசி னெமக்கே.

(அமர்-போர்; கடந்து-வென்று; வாஅள்-வாள் என்பது செய்யுளில் அளபெடுத்து வாஅள் என வந்தது; வடுவாழ்-வடு அழுந்திய; ஊறு – புண்; மெய் யாக்கை-உடம்பாகிய வடிவம்.)

வாளுக்கும் வேலுக்கும் அஞ்சாது வீரர்கள் அமர்புரிகின்றனர். வெற்றி கிட்டுகிறது.

வீரத்தின் பலன் வெற்றி. வீரர்களுக்கு வெற்றிதரும் பரிசுகள் வாள் பாய்ந்தவடுக்கள் தாம். மார்பிலே பெற்ற தழும்பு பதக்கமாகிறது. தோளில் ஏற்றது மாலையாகிறது. கையில் பெற்றது கடகமாகிறது, காலில் பெற்றது கழலணியாகிறது. பிரிக்கமுடியாத அணியாக, யாரும் மறுக்கமுடியாத அறிகுறியாக வடுக்கள் விளங்குகின்றன.

கண்ணிழந்தோரும், கரமிழந்தோரும், தாங்கள் இழந்த நலனை நினைக்கும்பொழுது, பெற்ற வெற்றியும், முடித்த செயலும் நினைவுக்கு வருகின்றன. தாங்கள் செலுத்திய காணிக்கை கண்டு மகிழ்கின்றனர்.

தழும்புகளைத் தடவிக்கொண்டவண்ணம் அந்த வீரர்கள் உலவுகின்றனர். அவர்களைக் கண்டு நாட்டுமக்கள் பெருமைகொள்ளுகின்றனர், பாட்டுப் புலவர்கள் பரணி பாடுகின்றனர். மாற்றார் மருளுகின்றனர், மற்றவர்கள் வியக்கின்றனர். புண்பட்ட உடல், பார்க்க அழகு குறைந்து தோன்றும். ஆனால் அவர்களைப் பார்க்கும் பொழுது, குறையாத வீரம், குன்றாத புகழ், மங்காத மாட்சி, மறையாத பண்பு இவைகளே காட்சியளிக்கின்றன. தாயகத்தின் மானங்காத்த வீரர்களின் வடுக்கள் நிரம்பிய உடல், வீரத்தின் முத்திரைகள் பெற்ற புகழுடலாகும்.

# தையற்கலை

[கே. பி. சுந்தரம் G. C. T. T. T., C.]

## சாதாரண பாடி

தையல் தொழில் ஆண்களைவிடப் பெண்களுக்குப் பயன்தரும் தொழில் ஆகும். பெண்கள் தாமே துணிகளை வெட்டித் தைத்துக் கொள்வதால், பிடித்தமானதும், வசதியானதுமான அளவுகள் கிடைப்பதுடன், பெறுகிற நேரமும், செலவும் குறைக்கப்படுகின்றன. எனவே பெண்கள் தையல் தொழிலைக் கற்றுக் கொள்வதால், தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் தேவையானவற்றை சிக்கனமான முறையில் அடையலாம்.

பாடிகள் பலவிதம், பலர் பலவகையாக வெட்டித் தைக்கிறார்கள். அவற்றுள் கீழே விவரிக்கப்படுவது ஓர்வகை. இந்த வெட்டுதல் முறையை நன்கு தெரிந்துகொண்டால் மற்றவைகளைப் புரிந்துகொள்வது எளிதாகும்.




இங்கு விளக்கப்பட்டுள்ள, பாடியை, காகிதத்தின்மீது, அல்லது கருப்பு மில்டன் (கம்பளித் துணி) மீது வரைந்து பழகவேண்டும். பின்பு விளக்கப்படத்தின் வடிவம்போல அமைந்திருக்கின்றதா என்று ஒத்திட்டுப்பார்த்தது, பிறகு வெட்டி, தைக்கவேண்டும்.

சோலி அல்லது பிளவுஸ் இவைகளைவிட பாடிக்கு, நீளம், லூஸ், தோள் அளவுகள் அணிபவரின் விருப்பப்படி குறைத்தோ கூட்டியோ வைக்கலாம்.

**அளவுகள் :**

| | | |
|---|---|---|
| மார்பு சுற்றளவு | .... | 32 அங். |
| முழு நீளம் | .... | 12 ,, |
| பாதி தோள் | ... | $5\frac{1}{4}$ ,, |

1-ல் இருந்து 0வரை $12\frac{1}{4}$ அங்குலம். முழுநீளம் நேர்கோடு வரையவும்

2-ல் இருந்து 0 வரை $6\frac{3}{4}$ அங். பாடி இறக்கம் (குறுக்குக்கோடு 2-க்கும் 7-க்கும் வரையவும். மார்பு சுற்றளவில், 4-ல் ஒரு பாகத்தில், $1\frac{1}{4}$ அங்குலம் குறைவு.)

3 ல் இருந்து 0 வரை $3\frac{1}{2}$ அங்.

4-ல் இருந்து 3 வரை $1\frac{3}{4}$ அங். (0-ல் இருந்து 4 வரை பாதித்தோள் அளவு $5\frac{1}{4}$ அங்.)

5-ல் இருந்து 4 வரை $\frac{1}{2}$ அங். (காந்தா அல்லது சோல்டர் இறக்கம்.)

6-ல் இருந்து 5 வரை நேர்கோடு.

7-ல் இருந்து 2 வரை 9 அங் $\frac{1}{4}$ மார்பு + 1 அங்.

8-ல் இருந்து 9 வரை 9 அங். (7-க்கும் 2-க்கும் உள்ள அளவு.)

9-ல் இருந்து 1 வரை $\frac{1}{2}$ அங், (பின்பக்கம் புள்ளிவைத்த கோடு)

10-ல் இருந்து 0 வரை $4\frac{1}{2}$ அங். (பின்பக்கம் கழுத்து இறக்கம்)

11-ல் இருந்து 6 வரை $1\frac{1}{4}$ அங்,

12-ல் இருந்து 11 வரை $\frac{3}{4}$ அங்.

**10, 3, 5, 12, 7, 8, 9** எண்கள் பின்பாகத்தை இணைப்பவைகள்.

2, 3, 5, 11, 7, 8, 1 எண்கள் முன்பாகத்தை இணைப்பவைகள்.

பின்பாகத்தில் 8-க்கும் 9-க்கும் உள்ள புள்ளிகளுடைய கோட்டின்மீது, வெட்டி எடுத்துவிடவும். முன்பக்கத்தைவிட பின்பக்கம் நீளம் ½ அங். குறைவு

முன்பக்கம்: ஓரம், கழுத்து, தோள்வளைவு. (ரியாத்), கீழ்ப்பக்கம் (பாட்டம்), ஆகிய இடங்களில் ¼ அங். அளவு மடித்து தைக்கவும்.

## ஜம்பர்

எந்தத்துறையிலேயும் பழமையை கழித்து புதுமையைக் காண விரும்புகின்றது இன்றைய உலகம். இன்று ஜம்பர் என்ற பெயர்தான், புதுமையானதே யொழிய, இதே உடையை சுமார் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு முன்னால் எல்லோராலும், விரும்பி அணியப்பட்டு வந்தது. இந்த உடையை அணிந்துகொண்டு வேலை, செய்வதற்கு மிகவும் வசதியாக இருக்கும். இன்றும் சில தாய்மார்கள் இந்த உடையை விரும்பி அணிவதைக் காணலாம்.

அளவுகள் :

| | | | |
|---|---|---|---|
| இடுப்பு உயரம் | ... | 14 | அங். |
| முழுநீளம் | .... | 18 | ,, |
| கை நீளம் (பிடரியில்) A-ல் இருந்து | | 14 | ,, |
| மார்பு சுற்றளவு | .... | 32 | ,, |
| கழுத்து (தைத்த பிறகு).... | | 22 | ,, |
| தலை சுற்றளவிற்கு ஒரு அங். அதிகம் | | | |
| முன்னங்கை சுற்றளவு | .... | 10½ | ,, |

கழுத்து, முன்னங்கை, இவைகள் படத்தில்காட்டியபடியும், இன்னும் பல மாறுதலான முறைகளிலும், தைக்கலாம்.

1-ல் இருந்து 0 வரை 18¼ அங். முழுநீளம் (நேர்கோடு).

2-ல் இருந்து 0 வரை 7 அங். (மார்பளவில், 4-ல் ஒருபாகத்தில் 1 அங். குறைவு குறுக்கு கோடு.)

3-ல் இருந்து 0 வரை 14 அங். இடுப்பு உயரம்.

4-ல் இருந்து 0 வரை 14 அங். கைநீளம்.

5-ல் இருந்து 4 வரை 5½ அங்.

6-ல் இருந்து 2 வரை 9½ அங். (¼ மார்பளவுடன் 1½ அங். அதிகம்.

7-ல் இருந்து 3 வரை 9½ அங்.

8-ல் இருந்து 1 வரை 9½ அங்.

9-ல் இருந்து 0 வரை 3 அங்.

10-ல் இருந்து 0 வரை 5¼ அங்.

11-ல் இருந்து 0 வரை 1½ அங்.

12-ல் இருந்து 9 வரை 3½ அங்.

A-ல் இருந்து 7 வரை ½ அங்.

11, 9 எண்கள் பின்பக்கம் கழுத்து இணைக்கவும்.

10, 12, 9 எண்கள் முன்பக்கம் கழுத்து இணைக்கவும்.

4, 5, முன்னங்கை இணைப்புகள்.

5, 6, 7, 8 (சைடு) பக்கம் இணைப்புகள்.

முன்பக்கம் திறப்பு (ஓப்பன்) கிடையாது ஆகையால் கழுத்து தைத்தபிறகு சுற்றளவு 22 அங்குலம் இருக்கவேண்டும். கழுத்து, முன்னங்கை, படத்தில் காட்டியபடி கலர் நூலில் தைக்கவும். (உள்பக்கம் ½ அங்குலம் துண்டு பால்சன் செய்யவும்.)

படம் தைப்பதற்கு ¼ அங்குலம் வைத்து வரையப்பட்டுள்ளது.



## எவ்வளவு தூரம் பார்க்கமுடியும்?

கடற்கரையோரத்திலோ, பாலைவனம் அல்லது புல்தரை போன்ற பரந்த வெளிகளிலோ நின்றுகொண்டு பார்த்தால், வானம் கவிந்து நிலத்தைத் தொடுவதுபோலக் காணப்படுகிறது. அந்தத் தொடுகிற இடத்தைத் தொடுவானம் அல்லது அடிவானம் என்று கூறுகிறோம். மேலும் பூமி உருண்டையாயிருப்பதால், எவ்வளவுதான் மிக நுட்பமான தொலைநோக்காடியை (டெலஸ்கோப்பை) வைத்துப் பார்த்தாலும், கொஞ்ச தூரத்திற்குள் இருக்கும் பொருள்களைத்தான் காணமுடியும். எவ்வளவு தூரத்துக்குப் பார்க்கமுடியும் என்பது எவ்வளவு உயரத்தில் நமது கண்கள் இருக்கின்றன என்பதைப் பொறுத்திருக்கின்றன.

ஒரு சாதாரண உயரமுள்ள மனிதன் கடற்கரையில் நின்றுகொண்டு பார்த்தால், 3 மைல் தூரம் வரைப் பார்க்க முடியும். அவருடைய அடிவானம் அந்தச் சமயத்தில் அந்த அளவு தூரத்தில்தான் இருக்கிறது. அவர் ஒரு 100 அடி உயரமுள்ள கம்பத்தின்மீது நின்றுகொண்டு பார்த்தால் சுமார் 13 மைல் தூரம் வரைப் பார்க்க முடியும். 150 அடி உயரமுள்ள இடத்தில் இருந்து பார்த்தால் 16 மைல் தூரம் வரைப் பார்க்க முடியும். ஒருமைல் உயரமுள்ள மலையுச்சியின் மீது நின்று பார்த்தால், 96 மைல் தூரத்திலுள்ள பொருள்கள் வரை தெரியும்.

கீழே கண்ட அளவுகள், மனிதன் நிற்கிற உயரத்துக்கும், அவன் பார்க்கக்கூடிய தூரத்துக்கும் தரப்பட்டுள்ளன.

| உயரம் | | பார்க்கக்கூடிய தூரம் | |
|---|---|---|---|
| 5 | அடி | 3 | மைல் |
| 10 | ,, | $4\frac{1}{4}$ | ,, |
| 15 | ,, | $5\frac{1}{4}$ | ,, |
| 20 | ,, | 6 | ,, |
| 30 | ,, | $7\frac{1}{4}$ | ,, |
| 50 | ,, | $9\frac{1}{2}$ | ,, |
| 100 | ,, | $13\frac{1}{2}$ | ,, |
| 150 | ,, | $16\frac{1}{4}$ | ,, |
| 200 | ,, | $18\frac{3}{4}$ | ,, |
| 500 | ,, | $29\frac{1}{2}$ | ,, |
| 1000 | ,, | 42 | ,, |

●●●

## 'திருடர்கள்' நாடகம்

ஒரு ஊரில் புதிய நாடகக் குழுவொன்று வந்து, நாடகங்களை நடத்தினார்கள். கட்டணங்கள் முதலில் அணா 4, அணா 8, ரூ 1 என்று இருந்தன. "அலிபாபாவும் நாற்பது திருடர்களும்" என்ற நாடகம் போட்டபொழுது, எதிர்பாராத விதமாக முதல் நாள் கூட்டம் நிறைய வந்தது. அதைப்பார்த்த நாடகங்களை நடத்துகிறவர் மறுநாள் கட்டணங்களை அணா 8, ரூ 1, ரூ 2, ரூ 4 என்று உயர்த்தி விட்டார்.

முன்னறிவிப்பு எதுவுமின்றிக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதால், நாடகம் பார்க்கவந்தவர்களில் மிகப்பலர் அதிகக் கட்டணம்கொடுத்து உள்ளே போகமுடியாமல், வெளியில் நின்றபடி கூச்சல் போட்டார்கள்.

கூச்சல் போடுகிறார்கள் என்பதைக் கண்ட நாடகம் நடத்துபவர், வெளியே வந்து அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார்.

"நாங்களும் நாடகம் பார்க்கவேண்டும். டிக்கட் கொடுங்கள்" என்று ஒருவர் கேட்டார்.

"நான்கு ரூபாய் டிக்கட்டுகள்தான் இருக்கின்றன. வேண்டுமானால் வாங்கிக்கொண்டு உள்ளே போங்கள்" என்று நாடகம் நடத்துபவர் சொன்னார்.

முன்னால் நின்றவருக்குக் கோபம் வந்தது; பின்னால் நின்ற மற்றவர்களைப் பார்த்து, "நான்கு ரூபாயாம்! சரிதான். இவரைத்தான் பார்த்துவிட்டோமே, இனி மற்ற நாற்பது திருடர்களைப் பார்க்கவேண்டிய அவசியமில்லை. வாருங்கள் போகலாம்!" என்று திரும்பினர்.

★★

---

கொடுங்கோலர்கள் அடக்குமுறையைத் தூவும்பொழுது, மனிதப் பண்புகளை மறக்க ஆரம்பிக்கின்றனர்; பின் சிறுகச் சிறுக மனிதகுலத்திலிருந்தே விலகி, வேறுபட்ட உயிரினமாகிவிடுகின்றனர்.

—ஹாஸ்லிட்.

---

## உயரமான மரங்கள்

...த்தில் வளருவதில் மிக உயரமாகக் ...ப்படுபவை யூகலிப்டஸ், செகுயா என்ற ...ங்களாகும்.

...லிப்டஸ் என்ற மரத்திலிருந்துதான், ...லியைப் போக்குவதற்கு உபயோகப்படும் ...டஸ் என்ற தைலம் இறக்கப்படுகிறது. ...ரேலியாவில் வளரும் யூகலிப்டஸ் மரங் ...க உயரமானவை. ஒருசமயம் அங்கு ...ப்பட்ட யூகலிப்டஸ் மரம் 500 அடி ...ருந்தது.

...யா என்பது, அமெரிக்காவின் மேற்குப் ...ல் வளரும் பிரமாண்டமான ஊசியிலைக் ...மரமாகும். அந்த மரத்தின் உயரத்தை ...வளர்ச்சியையும் கண்டு, "காட்டின் ..." என்று அதற்குப் பெயரிட்டிருக்கி... கலிபோர்னியாவில் அந்த மரங்கள் ...து வளருகின்றன. ஒரு வளர்ந்த மரத் ...யரம் 400 அடிகளுக்கு மேல் இருக்கும். ...கத்தில் எல்லாவிடங்களிலும் வளருகிற ... கொடி, மரங்கள் என்று எடுத்துக் ...டு, அவைகளின் உயரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், கடலில் வளருகிற கடற்பாசி மற் ...றெல்லாவற்றையும்விட உயரமானது. தென் அமெரிக்காவின் தென்கோடிக் கடலில், 600 அடிக்குமேல் உயரமுள்ள கடற்பாசிகள் வளரு கின்றன.

★★

## பைத்தியக்காரர்கள்

பைத்தியக்கார ஆஸ்பத்திரிக் கதவு திறந்த தும், ஒரு போலீஸ்காரன் 'இரண்டு' பேர்களை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தான்.

"ஏன் இவர்களைக் கொண்டுவந்திருக்கி றாய்?" என்று ஆஸ்பத்திரி அதிகாரி கேட்டார்.

"பைத்தியக்காரர்கள்"

"உனக்கு எப்படித் தெரிந்தது?"

"இவன் தன் பையிலிருந்த காசுகளை எடுத்து 'இந்தக் காசுகள் எனக்கு வேண்—டாம்' என்று பாடியவண்ணம் தெருவில் போட்டுக்கொண்டு போனான்."

"இரண்டாவது நிற்பவன்?"

"அவன் கீழே போட்டுக்கொண்டு போன பணத்தை இவன் பொறுக்கியெடுத்து, திருப்ப அவனிடம் கொடுத்தான்!"

---


...ளியாகிறது !

# ...வர் வழக்கு

அண்ணா உட்பட ஐவர் வழக்கு விவரம் :

- வழக்கின் காரணம்
- வழக்கு விசாரணை
- சாட்சியங்கள் முழுவிவரம்
- குற்றப் பத்திரிக்கை
- ஐவர் வாக்குமூலம்
- வழக்கறிஞர்களின் வாதப் பிரதிவாதம்
- நீதிபதியின் தீர்ப்பு முழு விவரம்
- தீர்ப்பை பற்றி அண்ணா

...50 பக்கங்கள் விலை அணா 12

...ரிகட்கு 25 பர்சன்ட் கழிவு உண்டு

...மணி" பதிப்பகம்

... சென்னை-1

விரைவில் வருகிறான் !

மாணவ மணிகளே,

திராவிட வீரர்களே,

விராங்கனைகளே !

வருகிறான்

உங்களைச் சந்திக்க,

அண்ணாவின் சொல் தட்டாத

# தம்பி

(தமிழ் அரசியல் வார வெளியீடு)

ஆசிரியர்

தில்லை-வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்)

டெமி ¼ அளவு—16 பக்கங்கள்.

எங்கும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு :

"தம்பி" அலுவலகம்,

சிதம்பரம்.

# "மன்றம்" வெளியீடுகள்

—★★★—

## கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ. 0—12—0

## ராஜாதி ராஜா!

இரா. செழியன் M. A. விலை ரூ. 0—12—0

## பொது அறிவு

—இரா. செழியன் M. A. விலை ரூ. 0—8—0

## மறைந்த திராவிடம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ. 0—3—0

- ரூ. 10-க்குமேல் வாங்குவோர்க்கே விற்பனைக் கழிவு
- விற்பனைக் கழிவு 25 சதவிகிதம்.
- முன்பணம் அனுப்புவோர்க்கே புத்தக அஞ்சலில் அனுப்பிவைக்கப்பெறும்.
- வி. பி. யில் வேண்டுவோர் வி. பி. கட்டணம் தனியே செலுத்தவேண்டும்.

விவரங்கட்கு :— நிர்வாகி, "மன்றம்"
26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1.

## விற்பனையாளர்க்கு

விற்பனையாளரில் பெரும்பாலோர், தாங்கள் தொடக்கத்தில் கொடுத்த வாக்குறுதிகளை அறவே மறந்துவிட்டு, கண்ணியக் குறைவாக நடந்து கொள்வதைக் கண்டு மிக வருந்துகிறோம். அப்போதைக்கப்போது பாக்கித் தங்காத வகையில், பட்டியல் தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம். பட்டியல் தொகை முன் கூட்டியே வந்து சேராவிடில், இதழ்கள் அனுப்பப்படுவது நிறுத்தப்படும் என்பதை உறுதியாய்த் தெரிவித்துக் கொள்கிறோம். மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலமாக மட்டுமே தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

நிர்வாகி,
"மன்றம்"

## 'மன்றம்' கட்டண விபர

| | உள்நாடு | வெளிநா |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 6—0—0 | 7—8- |
| ஆறு மாதம் .. ,, | 3—0—0 | 3—12- |
| தனி இதழ் .. ,, | 0—4—0 | 0—5- |

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜ[ண்]டுகள் தேவை.

நிர்வாகி,
மன்றம்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-